பக்கங்கள் 8

# ஈழநாடு
The Eelanaadu

60 சதம்

மலர் 22 ஐப்பசி 13 ஜுலை-கஜ 19 இதழ் 260
யாழ்ப்பாணம் புதன்கிழமை 29 - 10 - 80

RECEIVED 1980-10-29 PERIODICALS DIVISION
SRI LANKA - JAFFNA CAMPUS UNIVERSITY LIBRARY

## இரு மாதத்திற்குள் 11,000 ஆசிரியர்கள் நியமிக்கப்படுவர்

(யாழ்ப்பாணம்)
1981-ம் ஆண்டிற்குப் புதிதாக 11,000 ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்கா அமைச்சைப் பணித்துள்ளார்.

இந்த நியமனங்கள் யாவும் ஆசிரியர்கள் நியமனத்திற்கும் இடமாற்றத்திற்கும் பொறுப்பாகவுள்ள கல்விச்சேவைக் கமிட்டி மூலம் நடைபெறவிருக்கிறது.

ஆசிரியர்கள் தேவைப்படும் பாடசாலைகள் பற்றிய சகல விபரங்களையும் தற்போது அமைச்சு திரட்டி வருகிறது.

கணித, விஞ்ஞான வாத்தக ஆசிரியர்களே கூடுதலாக நியமிக்கப்படவிருக்கின்றனர்.

அடுத்த இரு மாதத்திற்கிடையில் இந்த ஆசிரியர் நியமனங்கள் நடைபெறவிருக்கின்றன. (க)

# 1981-ம் ஆண்டு வரவுசெலவுத் திட்ட மதிப்பீடு
# ரூ. 1559 கோடி துண்டுவிழுகிறது
## எட்டு அமைச்சுகளுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)
1981-ம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்ட மதிப்பீடுகளை நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

1981-ம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் மொத்த செலவினம் 3054 கோடி 35 லட்சத்து 48 ஆயிரத்து 195 ரூபாவாகவும், வரவு ரூ. 1494 கோடி 52 லட்சத்து 40 ஆயிரமாகவும், துண்டு விழும் தொகை 1559 கோடி, 89 லட்சத்து 8 ஆயிரத்து 195 ரூபாவாகவும் உள்ளது.

| | |
|---|---|
| நிதி, திட்டமிடல் : | 778, 67, 30, 8 3ரூபா |
| உள்ளூராட்சி : | 275, 29, 31, 500 ரூபா |
| கல்வி : | 202, 93, 99, 440 ரூபா |
| உணவு : | 172, 52, 59, 510 ரூபா |
| பாதுகாப்பு : | 119, 24, 46, 000 ரூபா |
| போக்குவரத்து : | 111, 05, 86, 000 ரூபா |
| விவசாயம் : | 109, 61, 19, 410 ரூபா |
| சுகாதாரம் : | 104, 61, 55, 640 ரூபா |

கடந்த வருடம் நவம்பர் மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த நடப்பு வருடத்திற்கான பட்ஜட்டில் துண்டு விழும் தொகை 1027 கோடி 19 ஆயிரத்து 326 ரூபாவாகவிருந்தது. இதனுடன் ஒப்பிடும் போது 1981-ம் ஆண்டு பட்ஜட்டின் துண்டு விழும் தொகை கடந்த வருடத்திலும் பார்க்க 532 கோடி ரூபாய் அதிகரித்துள்ளது.

அடுத்த ஆண்டுக்கான பட்ஜட்டில் பாதுகாப்பு, கல்வி, உள்ளூராட்சி வீடமைப்பு, நிதி, போக்குவரத்து, விவசாயம் அபிவிருத்தி ஆராய்ச்சி, சுகாதாரம், உணவு வர்த்தகம் ஆகிய எட்டு அமைச்சுகளுக்கே கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அமைச்சுக்களைப் பொறுத்தவரை யாழ். மாவட்ட அமைச்சுக்கு 2 கோடியே 75 லட்சமும் மன்னார், வவனியா, முல்லைத்தீவு மாவட்ட அமைச்சுகளுக்கு தலா 25 லட்சமும் மட்டக்களப்பு மாவட்ட அமைச்சுக்கு ஒரு கோடியும் திருகோணமலைக்கு 75 லட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு 16 லட்சத்து 50,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வரவு செலவுத் திட்டத்திற்கான யோசனைகளை நிதி அமைச்சர் அடுத்த மாத 5ம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். (ப)

## இலங்கை உள்விவகாரத்தில் இந்திரா தலையிடுகிறார்
### முன்னாள் வெளியுறவு அமைச்சர் வாஜ்பாய் கண்டனம்

புதுடில்லி, அக் 28
இலங்கையின் முன்னாள் பிரதம மந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டது குறித்து இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி கண்டனம் தெரிவித்துள்ளமை அவர் இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக அமைந்துள்ளது.

இவ்வாறு இந்திய முன்னாள் வெளிநாட்டமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் கருத்துத் தெரிவித்துள்ளார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## காஞ்சி காமாட்சி யானை காலமானது

சென்னை, அக். 28
காஞ்சிபுரத்தில் கோடானுகோடி பக்தர்களின் கரம்பட்டு புனிதம்பெற்ற காமாட்சியானை, இன்று மாலை காலமானது.

கடந்த மாதம் நோயுற்று ஒரு வார காலமாக காலில் ரண நோய் ஏற்பட்டதால் பெரும் அவதிக்குட்பட்டு, எழும்பமுடியாமல் படுக்கையிலிருந்த காமாட்சியைக் காப்பாற்ற கால் நடை மருத்துவ அதிகாரிகள் பெருமுயற்சி எடுத்தும் பலனில்லாமல் போய்விட்டது.

காஞ்சி காமாட்சி யானை காலமான செய்தி கேட்டு அதிர்ச்சியுற்ற ஏராளமான பக்தர்கள் காமாட்சி சிகிச்சை பெற்று வந்த இடத்துக்குச் சென்று கண்ணீர் அஞ்சலி செலுத்தினர்.

## லொறி–மோட்டார் சைக்கிள் கோர விபத்தில் இளம் சட்டத்தரணி பலி!

(யாழ்ப்பாணம்)
கைதடிச் சந்தியில் நிகழ்ந்த லொறி - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் சட்டத்தரணி ஒருவர் பலியானார்! மற்றும் ஒருவர் பலத்த காயங்களுடன் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இக்கோர விபத்தில், சாவகச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணி சி. பாலசுப்பிரமணியமே மரணமானவராகும்.

இவரும் மற்றுமொருவரும் மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த போது, யாழ்ப்பாணத்திலிருந்து வந்துகொண்டிருந்த லொறியுடன் கைதடிச் சந்தியில் விபத்துக்குள்ளானதாக மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. பலசுப்பிரமணியம், மரணவீடொன்றுக்குச் சென்றுவிட்டு மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பிக் கொண்டிருந்ததாகவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளை செலுத்தியவர் யாழ். ஆஸ்பத்

(8-ம் பக்கம் பார்க்க)

ஹோம் பினன்ஸ் லிமிட்.
82, கன்னதிட்டி ரோட், யாழ்ப்பாணம்
வருடாந்தம் ஆகக்கூடுதலான
25% வட்டியை
வழங்குகின்றது
ரூபா 1000/–க்கு மேற்பட்ட
எந்த முதலீட்டிற்கும்
மாதாந்தம் வட்டி வழங்கப்படும்
உங்கள் பணத்தை
விவேகமாக
முதலீடு செய்யுங்கள்
தலைமையகம்:
463, காலி வீதி கொழும்பு-3.
தொலைபேசி : 89190

யாழ். மாநகரசபை சுகாதார விழாவிற்காக
சுபாஸ் ஸ்தாபனத்தினர்
29-10-80 புதன்கிழமை பெருமையுடன் அளிக்கும்
கே. எஸ். பாலச்சந்திரனின்
“இளமைக் கோலங்கள்”
(புகழ் பெற்ற கலைஞர்களின் புதுமை நிகழ்ச்சி)
சிங்களத் திரையுலகத் தாரகை
குமுதினி விஜேநாயக்காவின்
அற்புதமான ‘டிஸ்கோ’ நடனம்
★ அபிமான வானொலிக் கலைஞர்களின் நகைச்சுவை விருந்து
★ திரை, வானொலிப் பாடகர்களின் இன்னிசை, மெல்லிசை விருந்து
யாழ். திறந்த வெளி அரங்கில் – மாலை 7-30 மணிக்கு
இனிய இந்நிகழ்ச்சியை இலவசமாக உங்களுக்கு அளிப்பவர்கள்
சுபாஸ் ஸ்தாபனத்தினர்
7909

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## வகுப்புக்கள்

மோட்டார் மெக்கானிசம், எலக்ரிக்கல் வயரிங், வெல்டிங், ஆகியவற்றின் புதிய வகுப்புக்கள் ஒவ்வொரு மாத முதல் பகுதியிலும் ஆரம்பிக்கப்படும். தொடர்பு கொள்க:- Patrician Industrial Institute 59, St Patrick's Rd, Jaffna.

7146

## கேள்விப்பத்திரம்

**ஊர்காவற்றுறை**
**ப. நோ. கூ. சங்கம்,**
**ஊர்காவற்றுறை**

4500 (நாலாயிரத்தி ஐந்நூறு) வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப்பத்திரம் கோரப்படுகின்றது. ரூபா 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் "பொதுமுகாமையாளர், ப. நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை" என்னும்விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 5-11-80ந் திகதிக்கு முன் அனுப்பிவைக்க வேண்டும்.

கேள்விப்பத்திரங்கள் 03-11-1980ந் திகதி பகல் 12-00 மணிவரை சங்கத்தில் விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூபா 750/- வைப்புப் பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

பதில்
பொதுமுகாமையாளர்
ஊர்காவற்றுறை.
27-10-1980 7196

## சுன்னாகம் பட்டின சபை, கேள்வி அறிவித்தல் 1981

சுன்னாகம் மீன் சந்தையில் அமைந்துள்ள மாட்டிறைச்சிக்கடை, ஆட்டிறைச்சிக்கடை, கருவாட்டுக்கடைகளுக்கான கேள்விப்பத்திரம்வழங்கப்படும் திகதி 05-11-1980 காலை 10-00 மணியாகவும், ஏற்றுக் கொள்ளப்படும் திகதி 07-11-1980 பகல் 12-15 மணியாகவும் நீடிக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன்.

பொ. பாலசிங்கம்,
விசேட ஆணையாளர்,
சுன்னாகம் பட்டினம்.

விசேட ஆணையாளர்
அலுவலகம்,
சுன்னாகம் பட்டினம்,
27-10-1980. 7199

## தேவை

காரியாலயப் பணியாளர் தேவை. தராதரம் குறைந்தது எட்டாம் வகுப்புச் சித்தியெய்தியவராயும், 20 வயதிற்கு மேற்பட்டவராயும், நற்குணமுடையவராயுமிருத்தல்வேண்டும். அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரங்களுடன் 10-11-1980க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இலக்கம்: 7204, C/o, ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம்

7204

## விற்பனைக்கு

பதிவு செய்யப்படாத டெலிக்கா வான், சீர்திருத்திய (F)போட் வான் விற்பனைக்கு உண்டு. ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7603, 7699. (7194)

கோழிக்குஞ்சுகள் (விருத்திப் பருவம்) விற்பனைக்குண்டு. ராதா மெஷின் கொம்பனி, 586, கண்டி ரோட், நெடுங்குளம் சந்தி, அரியாலை, யாழ்ப்பாணம். 7195

## சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம் சாக்குவிற்பனை

இச்சங்கத்தில் 6000 வெற்றுச்சாக்குவரை விற்பனைக்கு இருக்கிறது. கொள்வனவு செய்ய விரும்புவோர் கேள்விகளை சங்கத்தால் வழங்கப்படும் கேள்விப்பத்திர படிவத்தில் 05-11-1980 திகதி பகல் 12 மணிக்கு முன்னர் சங்கத்தில் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் மெழுகிட்ட கடித உறையில் "சாக்கு கேள்விப்பத்திரம்" என எழுதி அனுப்பவேண்டும். மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் ரூபா 300/-ம், கேள்விப் பத்திரப் பணம் ரூபா 5/-ம் செலுத்தி 30-10-1980 திகதி தொடக்கம் 04-11-1980-ந் திகதி பி. ப. பகல் 4 மணிவரை கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
சாவக சேரி
பல நோ. கூ. சங்கம்.

சாவகச்சேரி,
26-10-1980. 719

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## இன்றைய பலன்

ஐப்பசி மாதம் 13-ம் திகதி
(புதன்கிழமை)
(29- 10 -1980)

மேடம்- விருந்து பசாரங்களில் அதிக உற்சாகம் காட்டுவீர்கள். சிலர் புதுமனை கட்டுவதற்கும் ஆலோசிப்பர். திடீர் வரவிற்கும் இடமுண்டு.

இடபம்: தூரதேச வாசம் உங்களைத் துயரத்தில் ஆழ்த்தும். எதிர்பாராத விபத்திற்கும் இடமேற்படலாம். ஆயுதங்களுடன் பழகுபவர்களுக்கு அவதானம் வேண்டும்.

மிதுனம்- வேண்டாத தொடர்புகளால் வேதனை தாக்கும். அவசரக்கோலம் உங்களை ஆபத்தில் மாட்டிவைக்கும். பலவழிகளிலும் பணம் செலவாகும். அதிக பேச்சைத் தவிர்க்கவும்.

கடகம்- பணவிவகாரத்தில் திருப்திகரமான நிலை தென்படும். பேச்சுவன்மையால் பெரும் புகழ் அடைவீர்கள். மாணவர்களுக்குக் கல்வித் துறையில் முன்னேற்றம் உண்டு.

சிங்கம்- கடமைப்பாதையில் புதிய தடைகள் தலைதூக்கும். சொந்த வாழ்க்கையிலும் பிரிவுத்துயர் தாக்கலாம். நண்பர் ஒருவர் காலை வாரிவிடக்கூடும். நிதானம் வேண்டும்.

கன்னி- உறவுகள் பலப்படும் உள்ளத்தில் உவகை துள்ளும். உயர்வுக்கும் உயர்வு பிறக்கும். மாதுருவழியால் நன்மையும் உண்டு. தொழில்துறையில் முன்னேற்றமான நிலை காணப்படும்.

துலாம்; எண்ணியது எண்ணியபடி இன்று நடக்கும். உத்தியோகத்தர்களாயின் நிர்வாகத்துறையில் முதலிடம் பெறுவர். மக்கள் செல்வாக்கு மனதைக் குளிரவைக்கும்.

விருட்சிகம்--கருடப்பார்வை உங்களை வட்டமிடும். முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு விஷமிகள் திட்டம்போடுவார்கள். கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர்கள் மிகவும் கவனமாக இருக்கவும்.

தனுசு- களஸ்திரவழியால் பொருள் வரவுக்கு இடமுண்டு. பெரியோர்கள் ஆதரவு கிடைக்கும். காதல்விவகாரங்கள் தலைதூக்கும். இனிமையான சம்பவங்கள் இடம்பெறும். கண்ணியமானதினம்.

மகரம்: அவசரப்போக்கினால் அருமையான சந்தர்ப்பத்தைக் கோட்டைவிடக்கூடும். வணிகர்கள் அதிக முதலீட்டை தவிர்த்துக்கொள்ளவும். எக் கருமத்தையும் எண்ணித் துணிக.

கும்பம்- பிதாவழி மூலம் மகிழ்ச்சிதரும் செய்தியொன்றும் கிடைக்கலாம், ஏழைகளிடத்தில் இரக்கம்காட்டுவீர்கள். பெரியோரின் ஆதரவு தவறுமல் கிடைக்கும்.

மீனம்-நுட்பமான தொழில் புரிபவர்கள் பாராட்டப்படுவர். திறமையான நடவடிக்கை மூலம் பணலாபத்தைத் தேடிக்கொள்வீர்கள். திருப்திகரமான இடமாற்றத்திற்கும் வழிபிறக்கும்.

சோதிடக்கலாநிதி
**திருமலை**
**க. வேலுப்பிள்ளை**

மகாஜனக் கல்லூரியின் சிற்பி
**அமரர் தெ. து. ஐயரத்தினம் அவர்களின்**
**நினைவாஞ்சலி**



மாசனக்கல் லூரி மலரப் பணியாற்றி
ஆசில் அதிபராய் ஆங்கமர்ந்தான்—நேசமிகு
நல்ல ஜய ரத்தினமாம் நம்பிபுகழ் நாம்நினைவோம்
எல்லையில்சீர் போற்றுவோம் இன்று.

அபிவிருத்திச் சபையினர்,
மகாஜனக் கல்லூரி.

தெல்லிப்பழை,
1980-10-29. 7200





**புதுமையான போனஸ் திட்டம் உள்ள ஒரு சேமிப்பு**

வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி சேமிப்போருக்கு ஒரு கவர்ச்சியான அம்சத்தை அளிக்கின்றது.

சேமிப்பு கணக்கு வழங்குவது வருடத்திற்கு 10% வட்டி

உங்கள் கணக்கிலிருந்து ஒருவருடம் பணத்தை மீளாதிருந்தால் வருடத்திற்கு மேலதிகமாக 5% வட்டி ஆகவே வருடத்திற்கு 15% வட்டி வழங்கப்படும்.

உங்களால் இயன்ற பொழுது சேமியுங்கள்.
நேரமமாக பணம் கட்ட வேண்டும் என்ற நியதி கிடையாது.

எம்முடன் கணக்கு வைத்துக் கொள்ளுங்கள்.
மேலதிக விசேஷ சேவைகளை அளிப்பதில்
தனிப் பெருமை பெற்றவர்கள். எமது தலைமைக்
காரியாலயத்தில் அல்லது எமது கிளை அலுவலகங்களில்
முழுவிபரமும் அறிந்து கொள்ளலாம்.

கொள்ளுப்பிட்டி - 26174 கொட்டாஞ்சேனை - 23471
கண்டி - 08 - 3163 அல்லது 08 - 3217
யாழ்ப்பாணம் - 276 காலி - 09 - 2377
கலேவெல்ல - 95 மாத்தளை - 0662 - 485
வெள்ளவத்தை - 86097 மாத்தறை - 041 - 2819

வரையறுக்கப்பட்ட
இலங்கை வர்த்தக வங்கி
ஜெயதிலக்கா மாவத்தை கொழும்பு 1.
தொலைபேசி - 28193/5


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈராக் படைகளிடமிருந்து ஈரானிய எல்லை நகர் மீட்கப்பட்டது!

## தெஹ்ரான் வானொலி அறிவிப்பு

### இருதரப்பிலும் நூற்றுக்கணக்கில் பலி!!

தெஹ்ரான், அக். 28

ஈரான்-ஈராக் யுத்தத்தில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஈராக்படைகள் கைப்பற்றிய ஈரானிய எல்லை நகரை ஈரான் படைகள் நேற்று மீளக் கைப்பற்றிவிட்டது என்று தெஹ்ரான் வானொலி அறிவித்தது.

**நூற்றுக்கணக்கில் பலி!**

இந்த எல்லை நகரைக் கைப்பற்றுவதற்காக நடைபெற்ற கடும்சமரில் இரு தரப்பிலும் நூற்றுக்கதிகமான படைவீரர்களும் பொதுமக்களும் கொல்லப்பட்டனர் என்றும் அவ் வானொலிச்செய்தி தெரிவித்தது.

**27 டாங்கிகள் நாசம்**

இதேசமயம், இச் சண்டையில் ஈராக்கிய விமானங்கள் 27 ஈரானிய டாங்கிகளைநாசப் படுத்தியுள்ளன என்று ஈராக் அறிவித்துள்ளது.

**ஹொரம்ஷர் நகரில் கடும்சமர்**

இது இவ்வாறிருக்க, ஈரானிய துறைமுக நகரமான ஹொரம்ஷரைக் கைப்பற்ற ஈராக் துருப்புக்கள் பகீரதப் பிரயத்தனம் செய்துவரும் அதேசமயம், ஈராக் படைகளை விரட்டியடிப்பதில் ஈரானிய படைகள் தீவிரமாகப்போராடி வருகின்றன என்று ஈரான் தெரிவித்துள்ளது. (இ)

## பொலிஸ் நிலையம்

(கொழும்பு)

கிராமப் பகுதிகளுக்குப் பொலிஸ் நிலையங்களை விஸ்தரிக்கும் திட்டத்தின் கீழ் பல புதிய பொலிஸ் நிலையங்கள் விரைவில் திறக்கப்படவுள்ளன.

ஏற்கனவே பல இடங்களில் புதிய பொலிஸ் நிலையங்கள் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுவிட்டது.

50 புதிய மோட்டார் சைக்கிள்களும் 15 ஜீப்வண்டிகளும், 7 கார்களும் பொலிஸ் பகுதிக்கு வழங்கப்படவிருக்கின்றன. (க-அ)

## கலை விழா

(சுழிபுரம்)

சங்கானை முத்தமிழ் மன்றத்தின் ஐந்தாவது கலை விழா சங்கானை வைரவ ஆலய முன்றலில் கடந்த சனிக்கிழமை இரவு நடைபெற்றது. மன்றத் தலைவர் திரு. தி. சிவதெட்சணாமூர்த்தி தலைமையில் விழா நடைபெற்றது. "சீதைக்குப் பெருமை தேடித்தந்த சந்திப்பு" என்ற தலைப்பில் பட்டிமன்றமும், மன்றத்தினரின் 'மருந்துக்கு'' என்ற நாடகமும் விழாவில் இடம்பெற்றன. (அ)

## 4 மாதங்களில் மாநகரசபைத் தேர்தல்

சென்னை, அக். 23

தமிழ்நாட்டில் மாநகரசபைகள், பஞ்சாயத்துக்களுக்கான தேர்தல்கள் இன்னும் நான்கு மாத காலத்தில் நடைபெறும்.

இத்தகவலை மாநில உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. குழந்தைவேலு தெரிவித்தார். (இ)

## 100 பேர் உண்ணாவிரதம்

புதுடில்லி, அக். 23

தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர் திரு. ராஜசேகரனைச் சமீபத்தில் பொலிசார் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவத்திற்கு ஆட்சேபனை தெரிவித்து புதுடில்லி றெவின்யூ போட் அலுவலகத்திற்கு முன்னால் இந்திரா காங்கிரசையும், சிவாஜி ரசிகர்கள் மன்றத்தையும் சேர்ந்த சுமார் 100 பேர் உண்ணாவிரதமிருந்தார்கள். (வெ)

## இடைத்தேர்தல் ஒத்திவைப்பு

பட்னா, அக். 28

அடுத்த மாதம் 23-ம் திகதி நடைபெறவிருந்த நான்கு பீகார் சட்டபைத் தொகுதிகளுக்கான இடைத்தேர்தல்களும் டிசம்பர் மாதம்வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (இ)

## நாடுகளின் உள்விவகாரங்களில் எவரும் தலையிடக்கூடாது

### இதை வலியுறுத்த வேண்டும் என்கிறார் இந்திராகாந்தி

(புதுடில்லி, அக். 28

உலகநாடுகளில் பதட்டநிலை பெருகிவருவதனால் மண்டல சார்பற்ற இயக்கத்தில் அதிக ஒத்துழைப்பும் ஒற்றுமையும் ஒருமைப்பாட்டு உணர்வும் காட்டப்படவேண்டும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி புதுடில்லியில் நடைபெற்ற வைபவமொன்றில் பேசுகையில் கூறினார்.

இந்தியாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள மொரிஷியஸ் பிரதமர் சேர் ராம் குலாமுக்கு அளித்த விருந்துபசாரத்தின்போது பேசுகையிலேயே திருமதி காந்தி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

உலகநாடுகளிடையே உள்ள கருத்துவேறுபாடுகள், பிரச்னைகள் அமைதியான பேச்சுவார்த்தைகள் மூலமே தீர்க்கப்படவேண்டும்.

பல்வேறு நாடுகளில் உள்நாட்டுப் பிரச்னைகளில் வேற்று நாடுகள் தலையிடக்கூடாது என்பதையும் படைபலத்தை வறு நாடுகளுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடாது என்பதையும் மீண்டும் வலியுறுத்தி வேண்டுமென்றும் திருமதி காந்தி கூறினார். (இ)

## லட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் பத்திரகாளி அம்பாள் ஆலய ஏகதின லட்சார்ச்சனை அடுத்த மாதம் 2ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (கொ. அ

## அதிகாரம் மாறும்போது ஆளுநர்களைமாற்றக்கூடாது

### பத[illegible]க்கம்செய்யப்பட்டபட்வாரிகருத்து

சென்னை, அக். 28

ஆளுநர்கள் அரசியல் சாசனப் பதவிகளை வகிக்கிறார்கள். எனவே அதிகாரத்திலுள்ள அரசுகள் மாறும்போதெல்லாம் மாநில ஆளுநர்களையும் மாற்றக்கூடாது.

இவ்வாறு பதவியிலிருந்து வெளியேற்றப்பட்ட முன்னாள் தமிழக ஆளுநர் திரு. பிரபுதாஸ் பட்வாரி கூறினார்.

அரசுகள் மாறும்போது ஆளுநர்களையும் மாற்றும் செயல், கவர்னர்களை கட்சித் தலைவர்களின் நிலைக்குக் குறைத்துவிடும் என்றும் ஜனாதிபதியின் உத்தரவுப்படியே தாம் பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் அதனைத் தாம் ஆட்சேபிக்கப் போவதில்லை என்றும் திரு. பட்வாரி கூறினார்.

**எதிர்க்கட்சித் தலைவர்கள் கண்டனம்**

தமிழக ஆளுநர் பதவியிலிருந்து திரு. பிரபுதாஸ் பட்வாரி வெளியேற்றப்பட்டது சரியான நடவடிக்கை அல்ல என்று முன்னாள் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், ஜனதாக்கட்சித்தலைவர் திரு. சந்திரசேகர், பாரதீய ஜனதாக் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. எல். கே. அத்வாணி ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அதேவேளையில், மக்களின் நன்மை கருதி ஜனாதிபதி இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதில் தவறில்லை என்று இந்திரா காங்கிரஸ் திரு. எஸ். எஸ். மஹபாத்ரா தெரிவித்தார். (இ)

## துருக்கி தேசிய பந்தோபஸ்து சபைக்கு அதிக அதிகாரம்

### அரசியல் சாஸனத்தில் மாற்றம்; இராணுவபீடம் நடவடிக்கை

அங்காரா, அக். 28

துருக்கி இராணுவபீடம் அந்நாட்டின் அரசியல் அமைப்பில் பெரும் மாற்றங்களைச் செய்துள்ளது.

இந்த மாற்றத்தின்படி தேசிய பந்தோபஸ்து சபைக்கு அதிக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது.

உடனடியாக அமுலுக்கு வந்த இந்த மாற்றத்தினால் தேசிய பந்தோபஸ்துச் சபையினால் மேற்கொள்ளப்படும் எந்தவொரு முடிவையும், சட்டத்தையும் நீதிமன்றத்தினால் கூட ஆட்சேபிக்க முடியாது என்று இராணுவபீடம் அறிவித்துள்ளது.

கடந்த மாதம் துருக்கியில் இடம்பெற்ற திடீர் இராணுவப்புரட்சியை அடுத்து இராணுவத்தினர் ஆட்சியைக் கைப்பற்றியது தெரிந்ததே. (இ)


நெல் விளைச்சல் பெருக நிலையான துணை

ஸ்டாம் F 34

குதிரைவாற்புல், கடுக்கன்புல், சந்தனக் கோரை முதலாம் நெற்களைகளை அறவே ஒழித்துக்கட்ட வல்லது ஸ்டாம் F-34.

3, 4 டீபீஏ கொண்ட ஸ்டாம் F-34 நெல் வயலில் நெல்லுடன் வளரும் சகல புற்கள், கோரைகளையும் அழிக்கும். குறிப்பாக, குதிரை வாற்புல், கடுக்கன் புல், சந்தனக் கோரை, மும்முட்டுக் கோரை, நெற்சப்பி போன்றவற்றைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்தது.




ஸ்டாம் F 34

உங்கள் நெல் வயலில் ஸ்டாம் F-34 பாவித்தால் விளைச்சல் பெருகி அதிக லாபம் கிடைப்பது உறுதி.

CIC கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்
ஹேமாஸ் கட்டிடம், பிரிஸ்டல் வீதி, கொழும்பு 1.

TAL 5920

| நிகர அளவு | சில்லறை விலை |
|---|---|
| 3.25 லீட்டர் கொள்கலம் | ரூ. 260 60 |
| 450 மி. லீ. போத்தல் | ரூ. 38/75 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

கடவுளுக்காகத் தாகமுற்றிருப்பவனுக்கு அன்னம், பானம் போன்ற அற்ப விஷயங்களிலே எண்ணத்தைச் செலுத்துவது முடியாது போகும்.
—ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

## நமது நோக்கு

### ஆடம்பரச் செலவு குறைப்பு

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த வைபவங்களைத் தவிர்ந்த ஏனைய நிகழ்ச்சிகளுக்கான செலவுகள் எழுபத்தைந்துசத வீதத்தால் குறைக்கப்படவிருப்பதாகவும் அதற்கேற்ற விதத்திலேயே வரவு - செலவுத்திட்டத்தில் பணம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் ஒரு தகவல் கூறுகின்றது. இது உண்மையானல் இந்த முயற்சியைப் பாராட்டவேண்டும்.

இப்படி இதற்கு முன்னரும் ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் 'சிக்கனநடவடிக்கைத் தீர்மானங்களைப் பலதடவைகளில் மேற்கொண்டது நாடறிந்த விஷயம், ஆனல் இத்தீர்மானங்கள் சரியானமுறையில் செயல்படுத்தப்படவில்லை.

நாட்டில் வாழ்க்கைச் செலவு உச்சத்துக்குப் போய்க்கொண்டிருக்கிறது. எரிபொருள்களின் விலை உயர்ந்துவிட்டது; ஈராக் - ஈரான் யுத்தம் காரணமாக எரிபொருள்களின் விலை மேலும் அதிகரிக்கலாம்; தட்டுப்பாடும் ஏற்படலாம். அபிவிருத்தித் திட்டங்கள் பெரிய அளவில் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்நிலையில் ஆடம்பரச் செலவுகளை அரசு குறைத்துக்கொள்வது மட்டுமல்ல துப்புரவாக நீக்கவேண்டியது அவசியமாகும்.

ஒருகட்டிடத் திறப்புவிழாவுக்கோ ஒரு கிளைத்திறப்புவிழாவுக்கோ அமைச்சர் ஒருவர் செல்லும்போது ஏற்படும் வீண்செலவுகள் அதிகம். அமைச்சரை வரவேற்பதற்கும் அமைச்சரின் வருகைக்கான ஏற்பாடுகள் செய்வதற்கும் சம்பந்தப்பட்ட திணைக்களத்தின் வாகனங்கள் அமைச்சர் வருவதற்குப் பல தினங்களுக்கு முன்னரே சேவையிலீடுபடுவதைக் காணலாம். ஒரு மணி நேரத்துக்குள் முடிந்துவிடும் ஒரு திறப்புவிழாவுக்காக ஆயிரக்கணக்கில் பணம் செலவாவது அனைவரும் அறிந்ததே.

அமைச்சர்கள் பல பகுதிகளுக்கும் சென்று மக்களின் குறைகளை நேரில்கேட்டறிவது பயனுள்ள செயல்தான். ஆனல் இதற்காக ஆடம்பரச்செலவு அவசியமில்லை.

பெரும்பாலும் அமைச்சர்களின் சுற்றுலா கட்சி அரசியல் வளர்ச்சிக்குப் பயன்படுத்தப்படுகின்றது. பொதுத் தேர்தல் நெருங்கும் காலத்தில் இவ்விதம் பயன்படுத்தினலும் அர்த்தமிருக்கும். இப்பொழுது இதற்காகச் செலவு செய்வது அநாவசியமாகும்.

எனவே முக்கியமான தேசிய வைபவங்களைத்தவிர ஏனைய அரசாங்க வைபவங்களுக்கான செலவினங்களைப் பெருமளவில் குறைக்க வேண்டுமென்ற யோசனையை வரவேற்கவேண்டும். இது சரியாகச் செயல்படுத்தப்படவேண்டியது அவசியமாகும்.

### இன்று ஹட்ஸின் அம்மையார் வெள்ளிவிழா

# கருணைநிலையத்திலிருந்து 'காக்கும் கரங்கள்'

தேவதைகளைப்பற்றி கதைகளில் படித்து இருக்கின்ருேம். கண்ணுல்கண்டதில்லை. ஆனல் வாழ்ந்துத் தேவதையொன்று வையத்துள் வாழ்ந்து பலருக்கு வாழ்வளிக்கும் புதுமையைக் கிளிநொச்சியில் காணலாம். ஆம், கருணை நிலையத்து ஹட்சின் அம்மையார் தேவனின் திருத்தொண்டு புரியும் தேவதைதான். அந்த காக்குங்கரங்களின் கருணையைக் காண்போம் வாரீர்.

1955ல் அனுதைப்பிள்ளைகளுக்காக கிளிநொச்சியில் கருணை நிலயத்தை ஆரம்பித்தார். ஆரம்பத்தில் ஒருவீடுமட்டும் உண்டு. தற்பொழுது ஆலயம் இருக்குமிடம் அடர்ந்தகாடு. "பவனியக்காவும் நானும் இரு பிள்ளைகளும் படுத்திருப்போம், இரவில் யானைகளின் அட்டகாசம். தீமூட்டி மேளமடித்து யானைகளை வெருட்டுவோம்" என்று அம்மா தனது அனுபவத்தைச் சொல்லுவார். அனுதைகள், பள்ளிப்பிள்ளைகள், அகதிகள். ஏழைகள் ஆகியோரை ஏற்று வாழ்வளிக்கும் தயாக கடந்த 25 ஆண்டுகளாக தனி மனித சாதனையைப் புரிந்துள்ளார். அவரது கல்வித் தொண்டும், கடவுள் தொண்டும், கருணை நிலயத்திற்குப் புகழ் சேர்ப்பவை.

**— ஏ. கே. இராசேந்திரம் —**

இங்கிலாந்தில் வங்கி முதல்வரின் செல்வமகளாக மியூரியல் வைலற் ஹட்சின்ஸ் அம்மையார் 1899.ல் பிறந்தார். ஒக்ஸ்வோட் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டதாரியானர். அழகும், இளமையும் மிக்க ஆங்கில ஆசிரியையாக 1927ல் இலங்கைக்கு வந்தார். பின்னர் தென்னிந்தியா சென்று செந்தமிழும், கர்நாடக சங்கீதமும் கற்ருர், கொழும்பு, சுண்டிக்குளி, உடுவில், கோப்பாய் ஆகிய இடங்களில் ஆசிரியையராய் அதிபராய் பணிபுரிந்தார். கோப்பாய் வாழ்க்கை அவர் குறிக்கோளின்கருவூலமாயிற்று.

ஆசிரிய சேவையிலிருந்து இளைப்பாறி இங்கிலாந்து சென்ருர். யாழ்ப்பாண மண்ணைப் பிரிந்து வாழ முடியாத அம்மையார் இனத்தவர் தடுத்துங் கேளாது இலங்கை மீண்டார்.

அம்மையாரின் சொந்தப் பணத்தால் உயர்நிலையடைந்தோர் பலர். அவர்கள் இன்று தோட்டத்துரைமாராக, அரசாங்க அதிகாரிகளாக, ஆசிரியர்களாக பணிபுரிவதை நாடறியும். அனுதைகளை வளர்த்து கன்னிகாதானம் செய்து கொடுத்துக் கரையேற்றினர். குடியும் குடித்தனமுமாக வாழும் அவர்களை வாழ்த்த அம்மா மறப்பதில்லை.

தன்னலமற்ற தியாகச்சுடர் எங்கள் அம்மா. தள்ளாத வயதிலும், தளராது தொண்டுகள் புரிகிருர்.

சத்திர சிகிச்சைக்காக மகாரகம வைத்தியசாலைக்குச் சென்ருர் அம்மையார். அது சமயம் அவரது நோயை எண்ணி பலர் கண்கலங்கினர்கள். ஆனல் அந்தத் தாயுள்ளம் கருணை நிலயத்திலுள்ள பிள்ளைகளுக்காக ஏங்கியது.

1957-ல் கருணைநிலய விஸ்தரிட்புக்கு மேலும் 3 ஏக்கர் காணிக்கு அம்மையார் விண்ணப்பித்தார், அவரது தொண்டுகண்டு மகிழ்ந்த காரியாதிகாரி முருகேசம்பிள்ளையும், அரசாங்க அதிபர் திரு. ஸ்ரீகாந்தாவும் காணியைக் கையளித்தனர். ஆனல் காணி அமைச்சு கண்டிப்பாக கொடுக்க முடியாதென மறுத்துவிட்டது நேரில்வந்து நிலய வேலைகளைப்பார்வையிட்ட நிரந்தரச் செயலாளர் திரு. செல்டன் பெர்ஞண்டோ, இரு அதிகாரிகளின் புகழுரையை ஏற்று அம்மையார் பெயரில் காணியைக் கொடுத்தார். ஆனல் தனக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளாத அம்மையார் இக்காணியையும் திருச்சபைக்குக் கையளித்தார் இன்று இக்காணியின் பெறுமதி ஆறு இலட்சம் ரூபாவாகும். இது மட்டுமல்ல 1977ல் இலங்கையில் அம்மையாரின் பொன்விழாவில் 50 வருடச் சேவையைப் பாராட்டிக் கையளித்த நிதியையும் அவர் கருணைநிலயச்கடனுக்கே அவர் கையளித்தார்.

இந்தியாவில் அன்னை திரேசா போல் ஈழநாட்டில் செல்வி எம். வி. ஹட்சின் அம்மையார் சேவைபுரிந்து வருகிருர். பட்டம் பதவிகளை நாடாது, பத்திரிகை விளம்பரத்தைத் தேடாது அமைதியாக ஆக்கப்பணிபுரியும் அபூர்வ பிறவி. கடந்த 25 வருடங்களாக அம்மையார் ஆற்றிவரும் அரும்பணியைப் பாராட்டிக் கௌரவிக்க கிளிநொச்சித் தொகுதி எம். பி. திரு. ஆனந்தசங்கரி அம்மையாரை இப்பகுதிக்கு முதல் பெண் சமாதான நீதிபதியாக நியமித்தார்.

இந்தவயதிலும் அம்மையார் சொந்த வேலைகளைத்தாமே செய்கிருர். சட்டைகளைத் தைப்பதும், உடைகளைச் சலவை செய்வதும், சைக்கிள் ஓடுவதும் அவரது நாளாந்த

(8-ம் பக்கம் பார்க்க)

## வெள்ளிவிழா கொண்டாட்ட 'நிகழ்ச்சிகள்

(அரியாலை)

கிறிஸ்தவ மிஷனரியாக கிளிநொச்சி கருணை நிலயத்திலும் புனித பவுல் ஆலயத்திலும் கடந்த இருபத்தைந்து வருடங்கள் ஊழியஞ் செய்த செல்வி. எம். வி. ஹட்சின்ஸ் அம்மையாரின் வெள்ளிவிழா வைபவம் இன்று கிளிநொச்சி கருணை நிலயத்தில் கொண்டாடப்படுகிறது.

செல்வி எம். வி. ஹட்சின்ஸ் அம்மையாரின் இருபத்தைந்து வருட மிஷனரி ஊழியத்திற்கு நன்றி தெரிவிக்குந் திருவிருந்து ஆராதனையை கொழும்பு திருமண்டல பேராயர் அதிவணத்துக்குரிய சுவீதின் பெர்ணண்டோ ஆண்டகையும், யாழ்ப்பாண ஆர்ச்டீக்கன் வணக்கத்துக்குரிய சாம், டி. ஹோசிங்கடன் அடிகளாரும் அங்கிலிக்கன் திருச்சபைக் குருமாரும் ஒப்புச் கொடுப்பார்கள்.

புனித பவுல் சபையினரால் விழாவில் கலந்து கொள்ளும் சகலருக்கும் ஐக்கிய பகல் போசனம் அளிக்கப்படும். மாலை தேநீர் விருந்துபசரணையும் செல்வி எம். வி. ஹட்சின்ஸ் அம்மையாருக்குப் பாராட்டு விழாவும் நடைபெறும்.

கொழும்பு திருமண்டலப் பேராயர் தலைமையில் நடைபெறும் பாராட்டு விழாவில் கிளிநொச்சித் தொகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி, வடபிரதேச சமூக சேவை உதவி ஆணையாளர் திரு. கே. கெங்காதரன் ஆகியோரும் கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த பல பிரமுகர்களும் பேசுபவர்கள். வெள்ளிவிழா மலரொன்று வெளியிடப்படும்.

(அ)

## மக்கள் கருத்து

### புதிய தலைவர் கவனிப்பாரா?

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் யாழ். பஸ் நிலையத்தில் தனியார் விளம்பர சேவை ஒன்று நடாத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே

1978-ம் ஆண்டு போக்குவரத்துச்சபை கேள்விமூலமே இதனை தற்போதைய நிர்வாகிகளுத்கு வழங்கியது. இரண்டு வருடங்களுக்கென வழங்கப்பட்ட இந்தச் சேவைக்கான அனுமதியை இரண்டு வருடங்கள் முடிவடைந்த பின்னரும் புதிய கேள்வி கோரப்படாதது வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் தற்போதைய சிறந்த நிர்வாகத்தின் மீதும்; செயல்திறன் மிக்க தலைவர்மீதும் அவநம்பிக்கையையே ஏற்படுத்துகிறது.

கடந்த கேள்வியின்போது ஊழல் இடம்பெற்றதாக வதந்திகள் உலாவியதுபோல் இம்முறையும் வீண் வதந்திகளுக்குப் புதிய தலைவர் இடமளிக்கமாட்டாரென்றே திடமாக நம்புகின்ருேம். கடந்த கேள்வியின்போது கூடுதல் கேள்வி நிராகரிக்கப்பட்டுக் குறைந்த கேள்விக்காரருக்கே இவ்விளம்பர சேவை கிடைத்ததாகப் பலராலும் பேசப்பட்டது. புதிய தலைவர் எவ்வித ஊழலுக்கும் இடமளிக்காமல் விரைவில் இதற்கான கேள்வி விண்ணப்பத்தைக் கோருவாரென எதிர்பார்க்கின்ருேம்.

எஸ். சற்குணம்,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## இன்று ஜெயரத்தினம் நினைவு தினம்

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் சிற்பியான திரு. தெ. து. ஜெயரத்தினத்தின் நினைவு தினம் இன்ருகும். இவரது தந்தையார் திரு. அ. துரையப்பாபிள்ளை ஆரம்பித்த இக்கல்லூரியின் அபிவிருத்திச்கு வித்திட்ட அமரர் ஜெயரத்தினம் இக்கல்லூரி, சகல துறைகளிலும் சிறந்து விளங்க அரும்பாடுபட்டார். இவர் கல்லூரி அதிபராக இருந்தகாலத்தில் வடபகுதியில் மட்டுமன்றி இலங்கையிலேயே ஓர் உன்னதமான இடத்தை இக்கல்லூரி பெறுவதற்கு அடிகோலினர்.

இன்று இக் கல்லூரி, ஒரு கலங்கரை விளக்கம் போல் ஒளிகாட்டி நிற்கிறது.

அமரர் து. ஜெயரத்தினத்தின் நினைவு தினத்தை இன்று மகாஜனக் கல்லூரி நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்துகிறது.

-மாணிக்கம்.

## நாடும் நடப்பும்....

யாழ். மாநகரசபை சுகாதார வாரம் கொண்டாடுகிறது. பல வீதிகளிலும் அடிக்கடி மாநகரசபை லொறிகளும், டிராக்டர்களும் குப்பை கூளங்களைத் துரிதமாக ஏற்றிச்செல்லும் காட்சியைக் காணக்கூடியதாக இருக்கிறது. குப்பைகள் கொட்டிய இடங்களில் மேடாகிக்கிடந்த மண்ணையும் இந்த லொறிகள் ஏற்றிச்செல்லுகின்றன.

ஆனல் இது மழைகாலம். மழை விழுந்ததும் வீடுகளில் மரங்கள், கொடிகளைக் கத்தரித்து அவற்றை வீதிகளில் கொண்டுவந்து கொட்டுவது நமது பழக்கம்! குப்பைகளை ஏற்றிக்கொண்டு லொறிகள் புறப்பட்ட சிறிது நேரத்திற்குள் மரங்கள், கொடிகள், வாழைக்குற்றிகள் அதே இடத்தில் கொண்டுவந்து கொட்டும் காட்சியையும்காணமுடிகிறது.

சுத்தமும் சுகாதாரமும் பொதுமக்களிடமும் இருக்க வேண்டும்!

சுகாதார வாரத்தில் நகரில் நடைபெறும் துரித வேலைகளைப் பார்க்கும்போது சுகாதார வாரம் என்பதற்குப் பதிலாக 'சுகாதார மாதம்' வருடத்தில் அடிக்கடி அனுஷ்டித்தாலென்ன என்று கேட்கத் தோன்றுகிறது!

இதேபோல் மின்சாரப் பகுதிக்கும், மராமத்துப் பகுதிக்கும்கூட 'வாரம்' அல்லது மாதம் அனுஷ்டித்தால் நல்ல பயன் கிடைக்கும்!

⁂ ⁂ ⁂

இதோ ஒரு நல்ல செய்தி! அகில இலங்கை கம்பன் கழகம் செப்டம்பர் மாதம் 27-ந் திகதி சனிக்கிழமை தொடக்கம் கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண) வகுப்பு மாணவ மாணவிகளின் நன்மை கருதி, பிரதி சனிக்கிழமைகளிலும், விடுமுறை நாட்களிலும் கம்பராமாயண வகுப்பை நடாத்தி வருகிறது. வித்துவான் க. ந. வேலன் பி. ஓ. எல் அவர்களும், திரு. க. சிவராமலிங்கம் பி. ஏ. அவர்களும் இவ் வகுப்புக்களை சிரத்தையோடு நடத்திவருகிருர்கள்.

கம்பன் காவியப்பூஞ்சோலையில் இளைஞர்கள் இலக்கிய நயம் காணவேண்டும் என்ற அவாவால் உருவாக்கப்பட்ட கம்பன் சழகம் கம்பனுக்கு விழா எடுப்பதும் இலக்கிய அறிஞர்களைக் கௌரவிப்பதும், இலக்கிய வகுப்புக்களை இளைஞர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்பட நடாத்துவதும் நோக்கங்களாகக்கொண்டுள்ளது.

18-10-80 சனிக்கிழமை கழகம் வாணிபூசையை யாழ் இந்துக்கல்லூரி பிரார்த்தனை மண்டபத்தில் மிகச் சிறப்பாக நிகழ்வித்து, ஆசிரியர்களுக்குப் பாதபூசை புரிந்து மகிழ்ந்ததும் குறிப்பிடத்தக்கதாகும். வாழ்க கம்பன் கழகம்.

## ஊர்சுற்றி

### மீண்டும் முடிவின்றி ஒத்திவைப்பு

தெஹ்ரான், அக். 28

ஈரானிய பாராளுமன்றம் அமெரிக்க பணயக்கைதிகள் விடுதலை குறித்து நேற்று மீண்டும் இரண்டு தடவைகள் இரகசியமாக கூடி ஆராய்ந்த போதிலும் எவ்வித தீர்வும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ் விவகாரம் குறித்து இறுதிமுடிவை பாராளுமன்றம் மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாநகர சுகாதார வாரவிழா சிறப்பிதழ்

## மேயர் வாழ்த்துகிறார்

யாழ். மாநகரமுதல்வர் மாண்புமிகுஇராசாவிசுவநாதன் அவர்கள் விடுக்கும் செய்தி.

யாழ்ப்பாண மாநகரசபை ஒழுங்குசெய்துள்ள 1980ம் வருடத்துக்கான சுகாதார விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்புமலருக்குச் செய்தி விடுப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இச்சபையின் சௌக்கிய, சுகாதார அலுவல்களுக்குப் பொறுப்பாகவிருக்கும் மாநகர துணைமுதல்வர் பீ. எல். சேவியர், சுகாதாரக்குழுத்தலைவர் ஜனாப் பாஷா முகைதீன் பிச்சை மற்றும் விழாக் குழுவினர் அனைவருக்கும் இவ் வாய்ப்பை எமக்கு நல்கியமைக்காக எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

சுகாதாரவிழா அனுட்டானத்தையொட்டி வட்டாரங்கள் தோறும் பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. நகரின் பொதுச்சுகாதாரத்தை மையமாகக்கொண்டு ஒழுங்குசெய்யப்பட்டிருக்கும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் குடிநலமனப்பாங்குடன் பங்குபற்றிப் பயனடையுமாறு வரியிறுப்பாளர்களையும் பொதுமக்களையும் பணிவுடன்வேண்டுகிறேன்.

சபையின் நகரசுத்திவேலைகள் தடையீடின்றிச் சுமுகமாக நடைபெறுவதற்கு வசதி செய்யுமுகமாக உங்கள் வளவுகளில் உள்ள குப்பைகளைத் தெருக்களின்மீதும் வடிகால்களிலும் கொட்டும் வழக்கத்தைக் கைவிட்டு, வீட்டுப்பயிர் செழிக்க அதனைக் கலவைப் பசளையாக்கிப் பயன்படுத்த வேண்டுகிறேன்.

காணி நிலம் இல்லாத வீட்டுச் சொந்தக்காரர்கள், வர்த்தக தாபனங்கள் குப்பைவாளிகளை உபயோகிப்பதற்குத் தம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். நகரசுத்தி வாகனம் கடந்து சென்றபின் தெருவில் குப்பைகளைச் சிந்துவது, உல்லாசப்பயணிகள் தம்முடன் எடுத்துச்செல்லும் நினைவுகளால் நகருக்குக் கெட்டபெயர் உண்டாகும் என்பதுடன், அதன் பொதுச் சுகாதாரத்துக்கும் கேட்டை உண்டாக்குமென்பதை மனதில் கொள்வோமாக.

சுகாதாரவிழாக்காலத்தில் யாழ் நகரில் தற்சமயம்பெருகக்கூடிய நுளம்பின் ஒழிப்பிலும் கவனம்செலுத்தப்படுமென எதிர்பார்க்கிறோம். தாழ்ந்த பகுதிகளில் மழைகாலங்களில் வெள்ளத்தால் நேரிடக்கூடிய சுகாதாரக் கேடுகளைத் தவிர்க்கும்நோக்குடன் சுகாதாரவிழாக் கொண்டாட்டங்கள் நடைபெறும் சமகாலத்தில் குளங்களில் வண்டல் அகற்றும் வேலையும், வடிகால்களை துப்பரவுசெய்யும் வேலையும் சிரமதானமுறையில் நடைபெறுவதுஇங்குசிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மாநகரசபையால் ஒழுங்குசெய்யப்படும் சுகாதாரவிழா நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதோடு தம் கடன் முடிந்துவிட்டதாகக் கருதாது, இச்சபையின் சௌக்கிய, சுகாதாரசேவைப்பணிகளிலும் பொதுமக்கள் சபையின் பணியாளர்களுடன் தொடர்ந்து ஒத்துழைக்க வேண்டுமென்றும் இச்சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள அவாவுகிறேன்.

''நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்''

**இ. விசுவநாதன்**
மாநகர முதல்வர்,
யாழ்ப்பாணம்.

# சுகாதார ஒலி

**பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி)**
(வைத்திய பீடம், யாழ்ப்பாணம்)

நமது கோவில்களில் வருடா வருடம் கொடி ஏறி திருவிழா நடைபெறும். கோவிலை மையமாக வைத்து மக்களை ஒன்று சேர்ப்பதற்கு, நமது வழிபாட்டைப் பற்றிய ஒரு புதிய உணர்வை உண்டாகுவதற்கு, அந்த நாட்களிலாவது சமயத்தின் கோட்பாடுகளைக் கடைப்பிடிப்பதற்கு இந்தத் திருவிழாக்கள் மிகவும் தேவையானவை. வருடா வருடம் ஒரு வாரம் கொண்டாடப்படும் 'சுகாதார விழா'வும் இப்படியான ஒரு திருவிழாவே. அது தேவையானது ஆனால் ஆதமீக சிந்தனைக்கும் நல்ல ஒழுக்கத்திற்கும் திருவிழாக்கள் போதாது; சுகாதார வாழ்விற்கும் சுகாதார விழாக்கள் மட்டும் போதாது.

கோவில்களில் நித்திய கிரியைகளும், வீடுகளில் தினமும் தியானமும் சமய வாழ்விற்கு அத்தியாவசியமானவை. அதேபோல நல்ல சுகாதார வாழ்விற்குத் தினமும் சுகாதார சிந்தனையும், அந்த அடிப்படையில் ஒழுக்கமும் இன்றியமையாதன. இதற்குச் சுகாதாரக் கல்வி அவசியமாகின்றது.

சுகாதார மேம்பாடு அடைந்த நாடுகளின் மாநகர சபைகளில் சுகாதாரக்கல்வி புகட்டுவற்கு என்று ஒரு பகுதி இருக்கும். அந்தப் பகுதியினர் சிறு சஞ்சிகைகள், கைத்துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், பத்திரிகையில் விளம்பரங்கள், கருத்தரங்குகள், சுகாதாரப் பொருட்காட்சிகள் இப்படியானவை மூலம், வருடத்திற்கு ஒருமுறை அல்ல, வேண்டிய வேளைகளில் எல்லாம் சுகாதார செய்திகளைப் பரப்புவார்கள். யாழ் மாநகர சபை வைத்தியப் பிரிவில் இப்படியான ஒரு சுகாதாரப் பகுதி ஒரு முக்கிய தேவையாகும்.

நமது மக்கள் தெளிவாக அறிய வேண்டிய உணர வேண்டிய, ஒழுக வேண்டிய சுகாதாரப் பழக்க வழக்கங்கள் பல வுள. வீட்டையும் தெருவையும் சுத்தமாக வைத்திருத்தல்' நல்ல கிணறுகளையும் மலகூடங்களையும் கட்டுதல், போஷாக்குள்ள மலிவான உணவுகளை பிள்ளைகளுக்குக் கொடுத்து தாமும் உண்ணல், வீட்டிலும் தெருவிலும் விபத்துஏற்படாது கவனமாக இருத்தல், நோய் தடுப்பு முறைகளைக் கையாளுதல், நாட்டில் உள்ள வைத்திய சேவைகளை சரியான முறையில் பயன்படுத்துதல்— இப்படியாக நமது மக்கள் அறியவேண்டியன பல. இவற்றை சுகாதார விழாவின் போது விளம்பரப்படுத்தி முக்கியத்துவம் கொடுத்து ஒரு வித உணர்வை ஏற்படுத்தலாம். ஆனால் மக்களின் வாழ்வில் இவை நடைமுறைக்கு வருவதானால் நித்திய போதனையும் கண்காணிப்பும் தேவை. மக்கள் இவற்றைத் தாமே புரிந்து நடந்தால் மாநகர சபையின் வேலை மிகவும் குறையும். யாழ். மாநகர சபையில் நான் சுகாதார வைத்திய அதிகாரியாக (1961-63) இருந்தபோது சுகாதார ஒலி என்ற மாதாந்த நாலுபக்கங்கள் கொண்ட ஒரு வெளியீட்டை அச்சடித்து நடத்தினேன். அப்போது அதன் பிரதிகள் சமூக நிலையங்கள், பாடசாலைகள், அரசாங்க அலுவலகங்கள் நூல் நிலையங்கள் ஆகியவற்றிற்கு இலவசமாக அனுப்பப்பட்டன. சுகாதார ஒலி தொடர்ந்து சிலவருடங்கள் சேவை செய்தது. அதன் சேவை மகத்தானது. பிரபல வைத்தியர்கள் அவசியமான விஷயங்களை அதில் எழுதினர். அந்தக் காலத்தில் இளம் பிள்ளை வாதம் (போலியோ) பரவிய போது எமது சுகாதார ஒலி தடுப்பு இயக்கத்திற்கு உறுதுணையாக இருந்தது. மாநகரசபையின் முதல்வர் உபமுதல்வர் ஆணையாளர் முதலியோர் தமது சுற்றுடல் சுகாதாரம் பற்றிய வேண்டுகோள்களை அதன் மூலம் விடுத்தனர். பிரபல எழுத்தாளரும், கவிஞர்களும் எழுதி பொதுசனத் தொடர்பையும் பங்குபற்றுதலையும் ஏற்படுத்தினர்.

'சுகாதார ஒலி' இப்போது இல்லை. அது மீண்டும் கேட்க வேண்டும் என்பதே எனது வேண்டுகோள். மாதமாதம் நான்கு பக்கங்கள் கொண்ட வெளியீடே போதுமானது. சரியான முறையில் வெளிவந்து சரியானஇடங்களுக்கு அது ஒழுங்காகப் போகுமானால் திருப்திகரமான வெற்றி கிடைக்கும்.

20 வருடங்களுக்குமுன் டாக்டர்களிடம் இருந்து தமிழில் நல்ல கட்டுரைகள் வாங்குவது முடியாத காரியம். அவர்களின் ஆங்கிலக் கட்டுரைகளை மொழிபெயர்த்தோம். இப்போது நிலைமை வேறு. பெரும்பாலான இளம் டாக்டர்கள் இலகுவான கவர்ச்சிகரமான தமிழில் எழுதக் கூடியவர்கள். அததுடன் யாழ். வைத்திய உதவி வைத்திய, தாதி மாணவ மாணவிகளில், எழுத்தாளர் பாணியில் எழுதக் கூடியவர்கள் பலர் உண்டு. இவர்களின் திறமையை மாநகரசபை 'சுகாதார ஒலி' போன்ற ஏடு மூலம் பயன்படுத்தவேண்டும். யாழ். மாநகரசபை கொண்டாடும் சுகாதார விழாவிற்கு எனது வாழ்த்துக்கள்! சுகாதார வைத்தியர் பிரிவின் ஓர் அங்கமாக சுகாதாரக் கல்விப்பகுதி தேவைஎன்பது வேண்டுகோள்! அங்கே 'சுகாதார ஒலி' மீண்டும் வெளிவரவேண்டும்!

## சுகாதாரவிழா நிகழ்ச்சிகள்

29 - 10 - 80 புதன்கிழமை மு.ப. 7.00. மணிக்கு நகர சுத்திகரிப்பு, பி.ப. 1.00 மணிக்கு வட் 6, 7, 8, 9, 10.

மு.ப, 10-00 மணிக்கு இசைப்போட்டி (பாடசாலை) நகரமண்டபம்

பி.ப. 2 மணிக்கு சுகாதாரக் கருத்தரங்கு பி.ப. 5.35 மணிக்கு இடம் நகரமண்டபம்.

பி.ப. 6. சுகாதாரப்படக்காட்சி இடம் பாசையூர் புனித அந்தோனியர் ச. ச. நிலையம்.

30 -10 - 80 வியாழக்கிழமை மு,ப. 7-00 மணிக்கு நகரசுத்திகரிப்பு, பி. ப. 1.00 மணிக்கு வட். 12, 15, 16,11, மு.ப. 8.00 சுகாதாரக் கண்காட்சி பி.ப. 8.00 மணிக்கு சுகாதாரக் கண்காட்சி இடம் பொதுநூலகம், பி.ப. 6.00 மணிக்கு சுகாதாரப் படக்காட்சி இடம் நாவாந்துறை சென்மேரிஸ் ச. ச. நிலையம்.

31. 10.80 வெள்ளிக்கிழமை மு.ப. 7 00 மணிக்கு நகர சுத்திகரிப்பு பி.ப. 1.00 மணிக்கு வட் 19, 20, 21, 4, 13 மு. ப. 8. 00 மரம் நாட்டுவைபவம் மு.ப. 8. 00 பி.ப. 8.00 மணிவரைக்கும் சுகாதாரக்கண்காட்சி மு.ப. 10.00 மணிக்கு பேச்சுப் போட்டி (ச.ச.நி) பி. ப. 2.00 மணிக்கு கட்டுரைப்போட்டி பி, ப. 6.00 மணிக்கு சுகாதாரப் படக்காட்சி இடம் குருநகர் ச.ச.நி,

1-11-30 சனிக்கிழமை. மு. ப. 7-00 மணிக்கு நகர சுத்திகரிப்பு, மு. ப. 1 மணிக்கு வட். 22, 23, மு.ப, 8மணிக்கு சுதாரக்கண்காட்சி, பி. ப. 8 மணிக்கு சுகாதாரக் கண்காட்சி, மு. ப. 9 மணிக்கு இசைப்போட்டி (ச. ச. நி) நகரமண்டபம், மு ப. 10 மணிக்கு வில்லிசைப்போட்டி (ச. ச. நி) நகர மண்டபம். பி. ப. 2 மணிக்கு விளையாட்டுப் போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானம்.

2-11-80 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 6 [illegible] ஓட்டம், மரதன் ஓட்டம். மு, ப. 10-00 மணிக்கு ஊர்திகள் பவனி (முனியப்பர் கோவிலில் ஆரம்பமாகும்).

## சுகாதார விழா கலைநிகழ்ச்சிகள்

### 30-10-80 வியாழக்கிழமை

பிரதமவிருந்திர்: கலாநிதி சு. வித்தியானந்தன் துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்.

பி. ப. 6-00 பி. ப. 6-30 வில்லிசை - சுகாதார விழாவில் பரிசுக்குரியது. பி. ப. 6-30-7-30 வயலின் சோலோ இசை ஞானதிலகம் ஆர். ராதாகிருஷ்ணன் குழுவினர் (ஆர். ராதாகிருஷ்ணன், ஏ. ஜெயராமன், வயலின்) எஸ்.மகேந்திரன் மிருதங்கம், கே. கணேசபிள்ளை தவில், என் ஜேம்ஸ் மோர்சிங் கொன்னக்கோல், பி. ப. 7-30- பி. ப. 8-30 திருமதி ஞானமணி செல்லையாவின் பாரதிகலாமன்றம் அளிக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சி, பி. ப. 8-30-9-30 சுண்டிக்குளி இராஜன் இசைக்குழுவினரின் மெல்லிசை திரை இசை நிகழ்ச்சி.

### 31-10-80 வெள்ளிக்கிழமை

பிரதம விருந்தினர்:- வைத்திய கலாநிதி எஸ் சிவஞான சுந்தரம் (நந்தி) பி. ப 6 30 7-30 நாடகம் (சனசமூக நிலையங்கள் போட்டி நிகழ்ச்சி) 1. கலாஜோதி இளைஞர் ஒன்றியம் ''பரியாரியார் பரமசிவம்'' கலைச்சுடர் ச. ச. நிலையம் ''நகரத்தில் காலரா'' குருநகர் ச. ச. நிலையம் ''பூலோகம் போன யமன்'' பி.ப. 7-30-8-30 வானொலி, மேடை, திரைப்பட நடிகர் கே. எஸ். பாலச்சந்திரன் அளிக்கும் ''கோணேசின் சட்ட நாதர்'' நகைச்சுவை நாடகம் பி. ப. 8-30-10-30 மெல்லிசை, திரை இசை நிகழ்ச்சி

பாடகர்கள்- நடா ஜெயதேவன், வி. பி, அருள்தாஸ், முல்லை கணேஷ், பராசக்தி சிவலிங்கம்.

### 1-11-80 சனிக்கிழமை

பிரதம விருந்தினர் திரு. மு. சிவசிதம்பரம் பா. உ. பி.ப, 6.30 - 7 30 நாடகம் (சனசமூக நிலையங்கள் போட்டி நிகழ்ச்சி) 1. கொழும்புத்துறை மேற்கு ச.ச. நிலையம் ''பிணிப் பிசாசுகள்'' 2. அரியாலை சரஸ்வதி ச. ச. நிலையம் ''மாற்றங்கள்'' 3 ஸ்ரீகலைமகள் ச.ச. நிலையம் ''காலத்தை வென்றவன்'' பி. ப. 7.30 - 8.15 திருமதி கிருஷாந்தி ரவீந்திராவின் பரத நாட்டிய கலாகேந்திர மாணவிகள் அளிக்கும் கலைநிகழ்ச்சி, பின்னணி இசை நட்டுவாங்கம் - திருமதி கிருஷாந்தி ரவீந்திரன் டிப்ளோமா- பரதநாட்டியம், பாட்டு திருமதி சரஸ்வதி பாக்கியராசா சங்கீத வித்துவான். மிருதங்கம்: திரு. ஏ. எஸ். இராமநாதன் சங்கீத பூஷணம். வயலின்: செல்வி தனதேவி சுப்பையா சங்கீத வித்துவான், இராமநாதன் நுண்கலைக்கல்லூரி, யாழ்ப்பாணம். பி. ப. 8-15—9-30 மெல்லிசை திரைநிகழ்ச்சி-ரங்கன் இசைக் குழுவினர்.

## துணை மேயர் ஆசிச்செய்தி

யாழ். மாநகர துணை முதல்வரும் சுகாதார விழாக்குழுத் தலைவருமாகிய திரு. பிலிப் சேவியர் அவர்களின் பேனாவிலிருந்து.........

ஒரு நாட்டின் சுபீட்சம் அந் நாட்டில் வாழ்கின்ற மக்களின் கையில் தங்கியிருக்கிறதென்றால், அந் நாட்டு மக்களின் சுபீட்சம் அவர்கள் கைக்கொள்ளும் சுகாதார வாழ்க்கையில் தான் தங்கியிருக்குமென்பதை எவருமே மறுக்க முடியாது. மக்களின் வளமான வாழ்வுக்கு உறுதுணையாயிருப்பது உடல் நலனே! அவர்கள் தம் உடல் நலனை உறுதிப்படுத்தி சுகவாழ்வை நிலைநிறுத்த உதவும் முகமாகவே 'சுகாதார விழாவை ஒழுங்கு செய்தோம்.

ஜனப் பெருக்கமும், ஜன நெருக்கமும் அதிகரித்து வரும் யாழ் நகரில் சுகாதார நடவடிக்கைகள் தீவிரப்படுத்த வேண்டுமென்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஒரு சுகாதாரத் திட்டம் வெற்றிபெற மூன்று அம்சங்கள் மிக முக்கியமானவை அவையாவன, அவதானித்தல், தீர்மானித்தல், நடைமுறைப்படுத்தல் இவை மூன்றும் ஒன்றொடொன்று பின்னிப் பிணைந்தவை, அவதானிக்காமல் தீர்மானிக்க முடியாது; தீர்மானிக்காமல் நடைமுறைப்படுத்த முடியாது. நகரின் சுகாதாரப் பிரச்சனைகளை மக்களுக்கு அறிமுகப்படுத்தவும், அவற்றை அவதானித்து நல்வழியில் ஒழுக அவர்களை ஊக்கி விக்கவும் உதவுவதே சுகாதார விழா.

ஏறக்குறைய ஏழு ஆண்டுகளின் பின்னர், யாழ் மாநகர சபைஒழுங்குள்ளசுகாதார விழ சமகாலத்திலும், எதிர்காலத்திலும் மக்களுக்குச் சுகாதார உணர்வை ஊட்டி நல்வழிப்படுத்த உதவும் என்பதில் எந்த வித ஐயமுமில்லை. நோய் நொடிகளுக் கெதிராக யாழ் மாநகரசபை தொடுக்கும் போரில்யாழ்நகரமக்கள்தங்கள் ஒத்துழைப்பை நல்குவார்கள் எனத் திடமாக நம்புகிறேன்.

பசியும் பிணியும் நீங்குக! வசியும் வளனும் ஓங்குக!!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதிமுறையை ஒழிப்பதில் பரு. எம். பி. முழு முயற்சி

(நெல்லியடி)

''தமிழினத்தின் இன்றைய கீழான நிலைக்கு இனத்திற்குள்ளேயுள்ள சாதிப்பூசல்களே காரணமாகும். இதனை நம் மத்தியிலிருந்து முற்றாக அகற்றவேண்டும் என்று பருத்தித்துறைப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. துரைரத்தினம் அல்வாய் புலோலி ஐக்கிய சமூக சீர்திருத்தக் கழக ஆண்டு விழாவில் பேசுகையில் கூறினார். திரு. கே. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது.

''சாதிப்பிரச்னைகளையும் ஒடுக்கு முறைகளையும் அகற்றிட நான் என்னாலான முயற்சிகளை எடுத்து வருகின்றேன். ஆத்ம ஈடேற்றத்திற்காகவே இந்நடவடிக்கையில் துணிவுடன் செயலாற்றுகின்றேன். அரசியல் ரீதியில் எனக்கு பாதிப்பு ஏற்பட்டாலும் அதனைப்பற்றிக் கவலைப்படமாட்டேன்.

''தொகுதி அபிவிருத்தி வேலைகளில் சிறுபான்மைத் தமிழர் வசிக்கக்கூடிய இடங்களுக்கு முக்கிய இடம் அளித்து வருகின்றேன். அடுத்து எமது தொகுதியின் கிழக்குப் புறமாக உள்ள கடற்கரைப் பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய முக்கிய மளிக்கப்படுகின்றது.

''சாதிப்பிரச்னைகளுக்கும் ஏனைய பிரச்னைகளுக்கும் முதலாளித்துவ சுரண்டலே காரணமாகும். எனவே சுரண்டல் ஒழிக்கப்படல் வேண்டும். மனிதன் மனிதனாக மதித்துடன் - வாழ மனிதன் மனிதனுக வாழ வழி வகுப்பது சகலரின் கடமையாகும்.

1931-ம் ஆண்டிற்குப்பின் சர்வஜன வாக்குரிமை நடைமுறைக்கு வந்ததன் பின்பே அரசியல் வாதிகள் சிறுபான்மையினர் பக்கம் தமது பார்வையினைச் செலுத்தினர்கள். வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடனேயே சிறுபான்மைத் தமிழ் மக்களின் வீடுகளுக்குச் சென்றுவந்தனர் என்பது உண்மையான கருத்தாகும் மற்றும் கே. டானியல் பி. ஜே. அன்னி, எம். எஸ் சீனித்தம்பி, மு. வேதஸரணம் ஆகியோரும் பேசினர்கள்.

## ஆறுமாதக் சடூழியச்சிறை

(பச்சிலைப்பள்ளி)

ஒன்றரைப் பவுண் நிறையுள்ள தங்கச்சங்கிலியை வாங்கிக்கொண்டு நம்பிக்கை மோசடி செய்த நபர் ஒருவருக்கு பளை சுற்று நீதிமன்ற நீதிபதி க. வி. விக்கினேஸ்வரன் 6 மாத சடூழியச் சிறைத்தண்டனை விதித்தார்.

கச்சாய்வெளியைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா என்பவரிடம் பூநகரியைச் சேர்ந்த சித்திரவேல் என்பவர் ஒன்றரைப் பவுண் நிறையுள்ள தங்கச் சங்கிலியை வாங்கிவிட்டு நம்பிக்கைமோசடி செய்ததாகப் பளைப் பொலிசாரால் வழக்குத் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

எதிரி 79-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8-ம் திகதி குற்றத்தை ஒப்புக்கொண்டதினல் சங்கிலிக்குப் பெறுமதியான பணம் கட்டுவதற்குத் தவணை அளிக்கப்பட்டது. ஆனல் எதிரி நீதிமன்றத்திற்கு வரத் தவறியதினலும். பணம் எதுவும் கட்டாததினலும் றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார். நீதிபதி றிமாண்டில் இருந்த காலத்தையும் கவனத்திற் கொண்டு எதிரிக்கு 6 மாதச் சடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். (அ)

## புலவர்மணி நினைவு தினம்

(திருகோணமலை)

இலக்கிய வித்தகன் புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளையின் இரண்டாவது சிரார்த்த தினம் அடுத்த மாதம் 2ம்திகதி நாடெங்கிலும் கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

பெரும்பாலும் கிழக்குமாகாணத்தில் பல இடங்களில் அன்னாரின் நினைவுக்கூட்டங்கள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன' திருகோணமலை இந்துக்கல்லூரியின் வளர்ச்சிக்கு புலவர்மணி ஆற்றிய சேவையை நினைவு கூர்ந்து இக்கல்லூரியிலும்அன்ரது நினைவுதினம் கொண்டாடப்படவுள்ளது. (அ)

## நாளை நூல்வெளியீடு

(கொழும்பு)

''கதிர்காமமும் தெய்வானை அம்மன் தேவஸ்தானமும்'' என்னும் நூல்வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை மாலை பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

விஸ்வ இந்து பரிஷத்தின் ஆதரவில் இவ்வரலாற்றுநூல் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது (கொ)

## மகாதேவ ஆசிரமத்தில் சமயதீக்ஷை

(உருத்திரபுரம்)

கிளிநொச்சி மகாதேவ ஆஸ்சிரமத்தில் இன்றும் நாளையும் சமயதீக்ஷை வழங்கப்படும். சைவ சமயத்தைச் சார்ந்த ஒன்பது வயதிற்கு மேற்பட்ட ஆண் பெண் இருபாலாரும் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுவர்.

## வளர்ந்தோர்கல்வி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஐ. நா. கல்வி விஞ்ஞான கலாச்சார நிறுவனத்தினல் ஒழுங்குபடுத்தப்பட்ட வளர்ந்தோர் கல்வி சம்பந்தமான கருத்தரங்கில் யாழ்ப்பாணம் வளர்ந்தோர் கல்வி அதிகாரியாகிய சீ. எஸ். சுப்பிரமணியம் இம்மாதம் 31-ம் தேதி வரை கலந்து கொள்வார். (க)

## வைத்திய உத்தியோகத்தரின்றி சிரமம்

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய உத்தியோகத்தர் (டி. எம். ஓ.) இல்லாதபடியால் இப்பகுதி நோயாளர்களும் பொதுமக்களும் மிகுந்த சிரமம் அடைகின்றனர் நான்கு மாதங்களுக்கு முன்பு தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற மாவட்ட வைத்திய உத்தியோகத்தரின் இடத்திற்கு புதிதாக எவரும் இதுவரை நியமிக்கப்படவில்லை.

## விஜயதசமி விழா

(யாழ்ப்பாணம்)

புளியம்பொக்கணை நாகேந்திரா வித்தியாலயத்தில் நவராத்திரி பூசையும். விஜயதசமி விழாவும் சிறப்பாக நடந்தேறின.

இவ்விழாவினைப் பெற்றோரும், ஆதரவாளர்களும் கலந்துசிறப்பித்தனர். விஜயதசமியன்று குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி வைக்கப்பட்ட கொ)

## ஜப்பான் சென்றுர்

(சுழிபுரம்)

சுழிபுரம் மேற்கு இருத்தலடியைச் சேர்ந்த பொ. இரமலிங்கம் ஜப்பான் நாட்டுககு பயணமானர். இலங்கை அரசின் உதவிபெற்று மூன்று மாதம் ஜப்பான் நாட்டில் தங்கி இவர் மீன்பிடி சம்பந்தமான கல்வியைப் பெறுவார்.

## மக்கள் வேண்டுகோள் நிராகரிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை நகரில் மிக முக்கிய வீதியான திருஞான சம்பந்தர் வீதியை நவீன வீதியாகத் திருத்தும்படி நகராட்சி மன்றத்தை மக்கள் விண்ணப்பங்கள் மூலம் வேண்டியும் இவ்வீதி நவீனமயப்படுத்தப் படாததால் மக்கள் கவலையடைந்துள்ளனர். இவ்வீதியில் நகரின் முக்கிய நான்கு படமாளிகைகளும், நான்கு சைவ ஆலயங்களும் மற்றும் பல வர்த்தக ஸ்தாபனங்களும் இரு பெரும் கல்லூரிகளும்உள்ளன.

புகையிரத நிலையம், கடற்படை ஸ்தாபனம், துறைமுகம் ஆகியவற்றிற்கும் இவ்வீதி போக்குவரத்திற்குரியதாக இருப்பதாலும் பொதுமக்கள் நள்ளிரவு வரை இவ்வீதியை பாவிப்பதாலும் இவ்வீதியை நவீனமயப்படுத்வது அவசியம் பற்றி இப்பகுதி மக்கள் நகராட்சி மன்றத்தை பலதடவை வேண்டுகோள்விடுத்திருந்தனர் (அ)

## நேரில் பார்வையிட்டார்

(பண்டத்தரிப்பு)

பெருகளசஆறுறுப்பகையை மூளாய்க்கி அணைகட்டும் திட்ட பிரகாரம் கட்டுடைப் பகுதியில்மேற்கொள்ளப்பட்ட வேலைகள், அப்பகுதி விவசாயிகளின் நெற்செய்கைக்கு மிகவும் பாதகமான முறையில் நிறைவேற்பட்டிருப்பதாக கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கம் செய்த முறைப்பாட்டை அடுத்து யாழ். திட்டமிடல் அமுலாக்கல் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். சிவதாசன் நேரடியாக கட்டுடைக்குச் சென்று பார்வையிட்டார். புதிதாக அமைக்கப்பட்ட அணை நெற்காணிகளிலுள்ள மலதிகமான வெள்ளத்தை மூக்கை ஆற்றில் போய்ச்சேரமுடியாதவகையில் அமைக்கப்பட்டிருக்கிறது என்றும், சந்தரோடைப் பகுதியிலும் ஏனைய பகுதிகளிலும் சிறப்பான முறையில் செய்யப்பட்ட அணைவேலைகள் கட்டுடைப்பகுதியில்மட்டும் திருப்திகரமான முறையில் அமைக்கப்படவில்லை என்றும், கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கம் தமது புகாரில் தெரிவித்திருந்தது.

உதவிப் பணிப்பாளர் திரு. சிவதாசன் செய்துமுடிக்கப்பட்ட வேலைகளை பார்வையிட்டதுடன் அப்பகுதி விவசாயிகளுடனும் உரையாடி அவர்களின் குறைபாட்டை நீக்க தாம் தகுந்தநடவடிக்கை எடுப்பதாக அங்கு உறுதியளித்தார். (இ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30,
சனி-ஞாயிறு 2-30
சிவாஜி — பத்மினி
மரகதம்

ஹரன் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 . m 4-45, 7-15, & 9-45 p. m.
CARRY ON PEHIND
(Color)

சாந்தி
யாழ்நகர் - தினசரி 4 காட்சிகள்
நீயா?
'வெள்ளிவிழா'
வண்ணச்சித்திரம்
இன்னும் சில தினங்கள் மட்டுமே

(யாழ்ப்பாணம்)
மனோகரா
தினசரி 4 காட்சிகள்
Gregory Peck
in
THE OMEN
(Scope Color)
Adults only
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

எதிர்பாருங்கள்
ஒரேவானம் ஒரேபூமி

வசூலில் பெரும் சாதனை! 5-வது வெற்றி வாரம்!
இப்படத்திற்கு மாதர்கள் தரும் ஆதரவிற்கு நன்றி
ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் உருவான வசனம்.
ஜெய்சங்கர்-ஜெயசித்திரா-அசோகன்
மற்றும் பலர் நடித்த
வண்டிக்காரன் மகன்
(ஈஸ்மன் கலர்)

வெலிங்டன்
(யாழ்நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-30
THE GAUNTLET

லிடோ
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - சௌகார்ஜானகி
மகாகவி
காளிதாஸ்

ராணி - யாழ்ப்பாணம்
காலை 10-30, பி. ப. 2-30, 6-30, இரவு 9-45
கமலஹாசன் (இரு வேடங்களில்) ஸ்ரீப்ரியா
சட்டம் என் கையில்
(வயதுவந்தவர்களுக்கு மட்டும்)

விண்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2-30, மாலை 6-30 இரவு 9-30 மணிக்கு 4 காட்சிகள்
தோலயா மூவிஸ் அளிக்கும்
மாத்தளை கார்த்திகேசுவின் டீன்குமார், K.S. பாலச்சந்திரன், பரீஞலை, விஜயராஜா நடித்த
'அவள் ஒரு ஜீவநதி'
சிறந்த தமிழ் திரைக் காவியம்.

எழில் மிகு யாழ். ஸ்ரீதர் அரங்கில்
வெற்றி முரசு கொட்டும் 4-வது வாரமாக
அலைமோதும் ஜனசமுத்திரத்தில் கொட்டும் மழையிலும் கொட்டகை நிறைந்த காட்சிகளாக
ஈழவள நாட்டின் ரசிகப் பெருமக்களின் இதயந்தனில் தனி இடத்தை எடுத்துக்கொண்ட தமிழக முதல்வர் M G R. மற்றும்
லதா, நிர்மலா, V K. ராமசாமி, P S வீரப்பா
நம்பியார், தேங்காய், நாகேஷ், கண்ணன்
மற்றும் பலர் திறம்பட நடித்த ஸ்ரீதரின்
மீனவ நண்பன்
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணக்கலவை)

## புதுவருட நிர்வாகிகள்

(புளியங்குளம்)

கனகராயன்குளம் தெற்கு கிராம சபைப் பொதுக் கூட்டம் கனகராயன்குளம் கிராம சேவகர் திரு. கா. நாராயண பிள்ளையின் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்:- அ. அரிராசசிங்கம் செயலாளர்:- பொ. சந்திரசேகரம் பொருளாளர்:- பொ. கோபாலசிங்கம் உறுப்பினர்கள் எழுவரும் தெரிவு செய்யப்பட்டனர். (கு)

## உதைபந்தாட்டப் போட்டிகள்

(கோண்டாவில்)

யாழ்ப்பாணம் பாடசாலைகள் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டப் போட்டியில் யாழ் இந்துக் கல்லூரியும் கொக்குவில் இந்து கல்லூரியும் முறையே வெற்றிபெற்றன.

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத் துக்குமிடையே நடைபெற்ற போட்டியில் கொக்குவில் இந்துக்கல்லூரி வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் கனகரெத்தினம் மத்திய மகாவித்தியாலயத் துக்குமிடையே நடைபெற்ற போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 4-0 கோல்களால் வெற்றியீட்டியது.

இப்போட்டி சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும், மானிப்பாய்இந்துக்கும் இடையில் இரண்டாம் மூன்றும் பிரிவு உதைபந்தாட்டப்போட்டியில் மானிப்பாய் இந்து வெற்றியீட்டியது. இரண்டாம் பிரிவில் 4-2கோல்களாலும், மூன்றும் பிரிவில் 2-1 கோல்களாலும் வெற்றியீட்டியது இப்போட்டி யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாகம்ஸ் (சுன்னுகம்)
தினசரி 1-45pm, 7-00pm, & 9-30 pm
Seven Ups
(adults only)

'ஈழநாடு' வெற்றிக்கிண்ண

## உதைபந்தாட்டப் போட்டி நாளைவிண்ணப்பமுடிவுதிகதி

(யாழ்ப்பாணம்)

ஈழநாடு வெற்றிக்கிண்ணத் துக்காக காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் பன்னிரண்டாவது உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தினம் நாளையாகும்.

இச்சுற்றுப்போட்டி நவம்பர் மாதம் ஒன்பதாம்திகதி காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் ஆரம்பமாகின்றது எற்கெனவே இச்சுற்றுப்போட்டியில் பங்குபற்றுவதற்கு வடபகுதியைச் சேர்ந்த பல விளையாட்டுக் கழகங்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளன.

வடபகுதியில் உள்ள உதைபந்தாட்ட வீரர்களின் விளையாட்டுத்திறமையை மேலும் ஊக்குவிக்கும் நோக்குடன் நடாத்தப்படும் இச்சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் கோஷ்டிகளுக்கு ஈழநாடு வெற்றிக்கிண்ணம் உட்பட ஐந்து வெற்றிக்கேடயங்களும், ஆறு வெற்றிக்கிண்ணங்களும் வழங்கப்படும். நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும் இச்சுற்றுப் போட்டியின் இறுதிப்போட்டி தைப்பொங்கல் தினத்தன்று நடைபெறும்.

சகல போட்டிகளுக்கும் யாழ் மாவட்ட உதைபந்தாட்ட தீர்ப்பாளர் சங்க நடுநிலையாளர்களே கடமையாற்றுவார்கள், முதலாம் பிரிவின் பதினொருபேர்கொண்ட போட்டிகள் தவிர ஏனைய போட்டிகள் யாவும் நொக்கவுட் முறையில் நடைபெறும். இச்சுற்றுப்போட்டிக்கு வெளிமாவட்டத்தைச் சேர்ந்த விளையாட்டுக்கழகங்களும் விண்ணப்பங்களை அனுப்பிவைத்துள்ளன.

யங்ரேயல் விளையாட்டுக் கழகத்தின் செயலாளர் திரு க. பாஸ்கரன் இச்சுற்றுப்போட்டிக்கான சகல ஒழுங்குகளையும் செய்துவருகின்றார்.

## "நாட்டின்கல்விச் சேவைக்கு சிறந்தபணியாற்றியுள்ளது"

(அரியாலை)

"அகில இலங்கையிலும் உள்ள சிறந்த கல்லூரிகளிலொன்றாக பரி. யோவான் கல்லூரி விளங்கிவருவதினால் பழைய மாணவர்களாகியநாம் பெருமையும், மகிழ்ச்சியுமடைகிறோம். கல்லூரியில் கற்கும் மாணவர்கள் கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத்துறையிலும், நல்லொழுக்கத்திலும் சிறந்து விளங்கிவருவது மகிழ்ச்சிக்குரியதாகும். கடந்த 150 வருடங்களுக்கு மேலாக இக்கல்லூரி இந்த நாட்டின் கல்விச் சேவையில் சிறந்த பணியாற்றியதுடன், இலங்கைக்குச் சிறந்த கல்விமான்களையும் அளித்துளது. இதனால் கல்லூரி மட்டுமல்ல பழைய மாணவராகிய நாமும் பெருமையடைகிறோம்."

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரியின் உவில்லியம்ஸ் மண்டபத்தில் நடைபெற்ற கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த நீதியரசர் யே. டி. ஆசீர்வாதம் தமது உரையில் குறிப்பிட்டார்

காலஞ் சென்ற கல்லூரியின் பழைய மாணவர்களுக்கு அஞ்சலி செய்யும் முகமாக இரண்டு நிமிட நேரம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

நீதியரசர் யே. டி. ஆசீர்வாதம் தொடர்ந்து பேசுகையில் கூறிதாவது; கல்லூரி தனியங்க ஆரம்பித்த காலந்தொட்டு பழைய மாணவர்களும், கல்லூரியின் நண்பர்களும் அளித்த ஆதரவின்மூலம் கல்லூரி எதுவித கஷ்டமுமில்லாமல் நடந்து வந்தது. அரசாங்கம் தனியார் கல்லூரிகளுக்கு நிதியுதவி அளிக்க முன்வந்திருப்பதால் கல்லூரியின் வளர்ச்சியில் ஒருபடி முன்னேற்றம் காண வழிபிறக்கும் பழைய மாணவராகிய நாம் கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து வருவதுடன், கல்லூரி மேலும் வளர்ச்சியடைய நாம் சகல வழிகளிலும் உதவமுன் வரவேண்டும் என்று குறிப்பிட்டார். (க)

மகாஜனவில் •

## வெள்ளைப் பிரம்புதின கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

விழிப்புலனற்ற பிள்ளைகளின் விசேட ஆற்றலினால் உருவான பொருட்களைக்கொண்ட கண்காட்சியை தெல்லிப்பழை மகாஜனகல்லூரியில், கல்லூரி அதிபர் திரு பொன். சோமசுந்தரம் திறந்து வைத்தார்.

சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினத்தையொட்டி, தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தாரால் இவ்விழா ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. விழிப்புலனற்றோர் சங்கத்தலைவர் திரு கே. மகாதேவன், சங்கத்தின் நோக்கங்களையும் செயற்பாடுகளையும் எடுத்துக்கூறினார்.

நவீல்ட் பாடசாலை அதிபர் லயன் டேவிட் வெள்ளைப் பிரம்புதினம் கொண்டாடப்படுவதன் நோக்கத்தை விபரித்துக் கூறினார். தெல்லிப்பழை லயன்ஸ் கழகத்தலைவர் லயன் சி. எஸ் சுப்பிரமணியம், சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரன், லயன் மு. திருநாவுக்கரசு ஆகியோரும் உரையாற்றினார்கள். (க-அ)

## குழு நடனத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் தமிழ் மொழிப்பாடசாலைகளுக்கிடையிலான சங்கீத, நடன நாடக இறுதிப்போட்டியில் குழுநடனம் புதிய ஆச்கம் ஆரம்பபிரிவில் கோண்டாவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை முதலாம் இடத்தைப்பெற்றது.

போட்டிகள் யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற்றபோதே மேற்படி பாடசாலை முதலிடத்தைப் பெற்றது.

இப் பாடசாலை மிகவும் வசதி குறைந்த நிலையில் இருந்தும் கூட நல்லூர் வட்டாரப் போட்டியிலும், யாழ் மாவட்டப்போட்டியிலும் அகிலஇலங்கைப்போட்டியிலும் கூட முதலாம் இடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (கொ)

## தொலைபேசி வசதி கிடைக்கும்

(வவுணதீவு)

திமிலைதீவு உதவால் அலுவலகத்திற்கு விரைவில் தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவிருக்கிறது தற்போது மட்டக்களப்பு புகையிரத வீதியில் நிர்மாணிக்கப்பட்டுவரும் தன்னியக்க தொலைபேசிப் பரிவர்த்தனை நிலையம் பூர்த்தியானதும் மேலும் பல உபதபால் நிலையங்களுக்கு தொலைபேசி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இதற்கான மதிப்பீடுகள் பூர்த்தியாகியுள்ளன. அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

# 81ம் ஆண்டுஆரம்பத்திலேயே இலவச பாடப்புத்தகங்கள்

(புளியங்குளம்)

''அடுத்தவருட ஆரம்பத்திலேயே நாடு பூராவும் உள்ள பாடசாலைகளுக்குரிய இலவச பாடநூல்களை வழங்குவதற்கு கல்விச்சேவைகள் அமைச்சு நடவடிக்கையைமேற் கொண்டு வருகிறது.'' இவ்வாறு கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் திரு. தி. காரியவாசம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் அனுப்பியுள்ள சுற்றுநிருபத்தில் தெரிவித்துள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

● 1980 ல் மாணவர்களுக்குக் கொடுத்தபின்பு வருட முடிவில் திரும்ப வாங்கப்படும் நூல்களுள் மீண்டும் மாணவர்களுக்குக் கொடுக்கக் கூடிய எண்ணிக்கையையும் முன்னர் அனுப்பி வைக்கப்பட்டுள்ள நூல்களுள் பாடசாலையில் எஞ்சியிருக்கும் புதிய நூல்களையும் ஆசிரியர் குழுவுக்கு வேண்டிய நூல்களின் எண்ணிக்கையையும் கவனத்தில் கொண்டு பாடசாலை அதிபர்களினல் வழங்கப்படும் புள்ளிவிபரங்களுக்கமைய இவ்வருடம் 3ம் தவணை முடிவதற்குள் தேவையான சகல இலவச பாடநூல்களும் வட்டாரக் கல்வியதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படும்.

● 1981 ம் ஆண்டுமுதல் பின்வரும் புதிய நூல்கள் பாவனைக்கு வரவுள்ளன. அவையாவன: விஞ்ஞான- 8: புத்தசமயம்- 7; கணிதப் பயிற்சி- 4, 5; இந்துசமயம்-6, 7, 8; இஸ்லாம்- 6; கிறீஸ்தவம்- 6, 7, 8. தற்பொழுது பாவனையிலுள்ள இந்நூல்கள் யாவும் ரத்துச் செய்யப்படவுள்ளன.

● 1980 ம் ஆண்டு 9ம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்புக்கு வகுப்பேற்றம் பெற்றுச் செல்லும் மாணவர்களிடமிருந்து எந்த நூலும் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படமாட்டாது.

● சிங்கள மொழியிற் கற்கும் மாணவருக்குத் தமிழும், தமிழ் மொழியிற் கற்கும் மாணவருக்குச் சிங்களமும் கற்பிக்கப்படும் வகுப்புக்கள் இருப்பின் அவற்றுக்குத் தேவையான புதிய நூல்களும் வழங்கப்படவுள்ளன. (இ)

## இன்று

(மாவிட்டபுரம்)

மாவிட்டபுரம் விநாயகர் ஆலய சங்காபிஷேகம் இன்று நடைபெறுகிறது.

மாவை பாரதி மறுமலர்ச்சி மன்ற ஆதரவில் நடைபெறும் இவ்விழாவில்மகேஸ்வர பூசையும் இடம்பெறும்.

இவ்வாலயத்திற்கென புதிதாகத்தோண்டப்பட்ட கிணற்றிலிருந்து அபிஷேகத்திற்கு நீர் எடுத்துச் செல்லும் வைபவமும் இடம்பெறவுள்ளது.

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு ஊரதீவு உப தபால்நிலையத்திற்குத் தொலைபேசி வசதி செய்து தந்தமைக்கும் மற்றும் சேவைகளுக்கும் ஊர்காவற்றுறை எம்.பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்திற்கு பாராட்டுத் தெரிவிக்கு கூட்டம் ஒன்று இன்று ஊரதீவு உப தபால் நிலையத்திற்கு அண்மையில் சட்டத்தரணி திரு. எஸ். கே. மகேந்திரன் தலைமையில்நடைபெறவுள்ளது

ஃ ஃ ஃ

(யாழ்ப்பாணம்)

சுகாதாரவிழாவையொட்டி, சி. பொன்னம்பலம் வீதியில் பஸ் நிலையத்திற்கு முன்பாக விமாகி ஸ்தாபனத்தினல் புதிதாக அமைக்கப்பட்ட அலங்கார நீருற்றை இன்று மாலை யாழ். முதல்வர் திரு. இராஜா விஸ்வநாதன் சம்பிரதாய முறைப்படி ஒளியூட்டித் திறந்துவைப்பார், (க-அ)

## பயிற்சி

ரேடியோ-டெலிவிசன், ஏயார்கொண்டிசனிங், மூன்று மாத டிப்ளோமா பயிற்சி- சனி, ஞாயிறு வகுப்புக்கள், சிறந்த செய்முறைப் பயிற்சிகளுடன் 31-10-80வரை மாணவர் அனுமதிக்கப்படுவர். அனைவரும் சேரலாம். நாஷனல் அக்கடமி, 11, மொம்சாக் கட்டிடம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 7190

## திருமண அழைப்பு

### கணேசரத்தினம்- கலாதேவி

யாழ். நாச்சிமார்கோவிலடி பி. கோவிந்தராஜனின்(நாதஸ்வரக் கலைஞர்) புத்திரன் கணேசரத்தினம் அவர்களுக்கும், மாவிட்டபுரம் எஸ்.ஆர். ஞானசுந்தரத்தின் (பத்திரிகை நிருபர், நாதஸ்வரக் கலைஞர்) புதல்வி கலாதேவிக்கும்ஐப்பசி 14-ம் திகதி (30-10-80) காலை 9-30—10-30 மணிக்குமிடைப்பட்ட சுபமுகூர்த்தத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமி தேவஸ்தானத்தில் நடைபெறும் திருமண வைபவத்தில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அழைக்கின்றோம். கே. சிவவடிவேல், நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம். எஸ். ஆர்.ஞானசுந்தரம், மாவிட்டபுரம், தெல்லிப்பழை. வரவேற்பாளர்கள்: தவில் வித்துவான் என். ஆர். சின்னராசா தம்பதிகள், தவில் வித்துவான் எஸ். ஜெயராமன் தம்பதிகள், நாதஸ்வரவித்துவான் உ. பாலகிருஷ்ணன் தம்பதிகள்

## தேசிய எதிர்ப்பு ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தொழிற்சங்க நடவடிக்கைக் குழுவின் வடபிரதேசக் கிளையின் கூட்டம் இன்று மாலை கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் திரு. எஸ். விஜயானந்தன் தலைமையில் நடைபெறுகிறது.

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் அனைவரையும் நிபந்தனையின்றி சேவையில் அமர்த்தும்படியும் தொழிற் சங்கங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள தடைகளை நீக்கி ஜனநாயக ரீதியில் இயங்க உத்தரவாதப் படுத்தும்படியும் வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்ற சம்பளம் வழங்கும்படியும் கோரி நவம்பர் மாதம் 11-ம் திகதி நடைபெறவிருக்கும் தேசிய எதிர்ப்பு தினம் சம்பந்தமான ஆலோசனைகள் இடம்பெறும்

அரசியல் கட்சிகள் வெகுஜன ஸ்தாபனங்கள் இக்கூட்டத்திற்கு அழைக்கப்பட்டுள்ளன.

## இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையினர் மறைந்த தமிழறிஞர்களான தனிநாயக அடிகள், மயிலைசீனி வேங்கடசாமி, தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் ஆகியோரின் நினைவாகக் கருத்தரங்கொன்றை இன்று பிற்பகல் 2-30மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தில் நடாத்துகின்றனர்.

இக் கருத்தரங்கில் பேராசிரியர் கே. கைலாசபதி, பேராசிரியர்.கே.சிவத்தம்பி, கலாநிதி அ.சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றுவர். (வெ)

பத்தாம் வகுப்பு - தமிழ்மொழி
இரண்டாம் பகுதிக்கான
20
கட்டுரைப் பூந்துணர்
ஆசிரியர்: வித்துவான்
க. சொக்கலிங்கம் M.A. (Cey.)
விலை 8-25.
காந்தளகம்
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

## பாலஸ்தீன இயக்கத்தின் திட்டப்படி

# ஈரான் ஈராக் யுத்தத்தைநிறுத்த ஆறு அணிசேரா நாடுகள் முயற்சி

நியூயோர்க். அக். 2?

ஈராக்—ஈரான் யுத்தத்தை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான முயற்சியில் ஆறு மண்டல சார்பற்ற நாடுகளும் பாலஸ்தீன விடுதலை இயக்கமும் ஈடுபட்டுள்ளன.

அல்ஜீரியா, கியூபா, இந்தியா, பாகிஸ்தான், யூகோஸ்லாவியா, ஸாம்பியா ஆகிய மண்டல சார்பற்ற நாடுகளைச் சேர்ந்த வெளிநாட்டு அமைச்சர்களையும்பாலஸ்தீனவிடுதலை இயக்கத்தையும் சேர்ந்த பிரதிநிதிஒருவரையும் ஈரானுக்கும், ஈராக்குக்கும் அனுப்பி அமைதிப் பேச்சுக்களை நடத்தவேண்டும் என்ற பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் யோசனைக்கு ஏனைய ஆறுநாடுகளும் சம்மதம் தெரிவித்துள்ளன.

இந்த விசேட பிரதிநிதிகள் குழுவின் வருகையை ஈரானும் ஈராக்கும் ஏற்றுக்கொள்வதென்று தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ)

# கடற்றொழிலாளர் நலனுக்கு ஒரு சம்மேளனம் உதயம்!

## அலோசியஸ் தலைமையில் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

மீனவர்களின் கல்வி, காணி, வீடில்லாப் பிரச்னை, சமூக சமுதாயப் பிரச்னைகளை தீர்ப்பதற்கும், கடலில் நடைபெறும் வலைத் திருட்டைத் தடுப்பதற்கும், கோஷ்டிச் சண்டைகளை ஒழிப்பதற்கும் ''யாழ். மாவட்ட கடற்றொழிளாளர் சம்மேளனம்'' என்ற பெயரில், புதிய சம்மேளனம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் சென் யேம்ஸ் பாலர் பாடசாலை மண்டபத்தில் வண பிதா ஸ்ரனிஸ்லாஸ் தலைமையில் நடந்த கூட்டத்தில் இச்சம்மேளனம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்திலுள்ள கடற்றொழிலாளர்களை ஒன்று திரட்டி, அவர்களை முன்னேற்றுவதற்காகவும், மீனவர்களுக்கு இலகுவான முறையில், மீன்பிடி உபகரணங்களை பெற்றுக் கொடுப்பதற்கும், இச்சம்மேளனம் முயற்சி எடுக்கும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் சகல தொகுதிகளிலிருந்தும், கடற்றொழிலாளர்கள், இக்கூட்டத்திற்கு வந்திருந்தனர்.

இச்சம்மேளனத்தின் தலைவராக, முன்னுள் மானிப்பாய்த் தொகுதி ஐ. தே. க. வேட்பாளரும், மானிப்பாய் ஐ.தே.க. அமைப்பாளரும், மானிப்பாய் மீன்பிடி கூட்டுறவுச் சங்க இயக்குனரும், சமாதான நீதவானுமான திரு. ஆர். எஸ். அலோசியஸ் தெரிவு செய்யப்பட்டுள்ளார். உப-தலைவராக திரு. ம. பாலநாதனும், செயலாளராக திரு. என். நாகரத்தினமும், உப-செயலாளராக ஆர். அன்ரனும், பொருளாளராக திரு. ஏ. ஜேசுதாசனும், தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மீனவர் கூட்டுறவுச் சங்க ரீதியாக ஒவ்வொரு பொறுப்பாளர் நியமிக்கப்பட்டுள்ளனர். (க)

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

இருபாலை ஸ்ரீ வாலாம்பிகா தேவி சமேத வைத்தீஸ்வரஸ்வாமி ஆலயத்தின் பாலஸ்தாபனம் இன்று காலை நடைபெறும். (வெ)

## கருணை...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கடமைகளாக இருக்கிறது. நாடகப்பிரியரான அம்மையார் ஆண்டுதோறும் தரமான தமிழ், ஆங்கில நாடகங்களை ஆக்கி மேடையேற்றுவார் அவர் அநேக பாக்களையும் இயற்றியுள்ளார்.

ஆண்டவனின் பக்தையாக என்றும் எல்லோரும் தொழும் ஏழைகளின் அன்னையாக பணிபுரிந்து வருகிறுர். தொண்டர் தம்பெருமை சொல்லவும் கூடுமோ? ஆண்டவன் அருளால் அன்னையார் வாழ்க பல்லாண்டு வாழிய அவர் தொண்டுகள்!!,

கர்த்தர் அருளால் கருணை நிலையத்துக் காக்குங்கரங்கள் வாழ்க (ர)

## இலங்கை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமதி பண்டாரநாயக்காவும் திருமதி இந்திராகாந்தியும் நெருங்கிய நண்பிகளாக இருக்கலாம். ஆனுல் இலங்கையின் உள்விவகாரங்களில் திருமதி காந்தி எக்காரணம் கொண்டும் தலையிடுவதை அனுமதிக்க முடியாது என்றும் திரு. வாஜ்பாய் தெரிவித்துள்ளார். (இ)

## கோரவிபத்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

லொறிச் சாரதி ஜோர்ஜ் எல்மோவை இம்மாதம் 30-ம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறும் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ்.எஸ். பிரான்சிஸ் உத்தரவிட்டார்.

## மரண அறிவித்தல்

### அப்புக்குட்டி தம்பு அருளானந்தம்

அச்சுவேலியைச் சேர்ந்த அப்புக்குட்டி தம்பு அருளானந்தம் காலமானுர். இவர் காலஞ்சென்ற மரியம்மாவின் அன்புக் கணவரும், யோசப் ஜெயராசா, இம்மானுவேல் துரைராஜா, கீதபொன்கலன் பொன்ராசா, லோறன்ஸ் செல்வராசா, கிறிஸ்ரி சிங்கராசா, மார்சலின் நவராசா, கிளமென்ற் ஜோர்ஜ், அன்ரனி அலோசியஸ் ஆகியோரின் அருமைத் தந்தையுமாவார்.

அன்னுரது பூதவுடல் நாளை வியாழக்கிழமை (30-10-80) காலை 8 மணியளவில் நல்லடக்கத்திற்காக ... சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தோட்ட வளவு, அச்சுவேலி. 7210

இப்பத்திரி ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கோவில் வீதி ... 63-ம் இலக்க அச்சகத்தில் அக. 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at General Post Office Sri Lanka under No. GB 8948/78 The Eelanaadu P. B. No 49
Telegrame Eelanaadu. Phone, 389.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org